July 2006
පීසී ටයිම්ස් பீசீ டைம்ஸ்
ISSUE 05 Rs. 30/-
9 771391 502008

# தமிழ் PCTIMES

தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

ஜுலை 2006
மலர் 1 - இதழ் 5



WIN
PC TIMES MAGAZINE

Photo Editing


கணினிக்கும் காய்ச்சல் வரும்

Wikipedia


Wireless தொழில்நுட்பம்

இலங்கையின் ஒரேயொரு மாதாந்த தகவல் ெ

# "Vaiu type U" Notebook PC




புத்தக அளவிலான Notebook PC தயாரிப்புக்களை ஜப்பானிய இலத்திரனியல் உபகரணத் தயாரிப்பாளர்களான SONY நிறுவனத்தினர் அறிமுகப்படுத்தியுள்ளனர். Blu-ray disk drive உடன் கூடிய "Vaiu type U" எனப்படும் இந்த Notebook PC யானது, Core Solo U1300 processor ஐயும், 4.5 அங்குல அகலமான LCD display, மற்றும் Sliding keyboard ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இதன் விலை 1,540 அமெரிக்க டொலர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.





New Arrivals

புதுவரவு




## SAMSUNG SPH M8000

Video player வசதியுடன் கூடிய கைத்தொலைபேசியான (WIBRO) Samsung SPH M8000 தற்போது சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கைத்தொலைபேசி Real Time Streaming வசதியையும் கொண்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

# ஓவியம் தீட்டும் றோபோ

கைகளால் ஓவியம் கீறும் மனிதத் திறனுக்கும் தற்போது றோபோக்கள் சவால்விடத் தொடங்கிவிட்டன. ஜப்பானிய Tokyo University Institute of Industrial Science நிறுவனம் "Dot-cyan" எனப்படும் Painting Robot வைக் கண்டுபிடித்துள்ளது. கடந்த மே மாதம் இந்த றோபோ அப்பிள் பழம் ஒன்றை அப்படியே பார்த்து வரைந்து தன்னுடைய ஓவியத் திறனை நிரூபித்தும் உள்ளது. இந்த உபகரணம் multi-view CCD கமெராவையும், பல விரல்களைக் கொண்ட கை போன்றதொரு அமைப்பையும் கொண்டுள்ளது.



# "Vaiu type A" Notebook PC

200GB Hard Disk drive, 17 அங்குல LCD திரை ஆகியவற்றுடன் கூடிய "Vaiu type A" வகை Notebook PC யை ஜப்பானிய SONY நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. Full High Dimension Images ஐ பதிவுசெய்து வைக்கக்கூடிய திறனைக் கொண்டுள்ள இதன் விலை 3,600 அமெரிக்க டொலர்களாகும்.

தமிழ் PCTIMES
தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

**Editor**
K.Rushangan
editorpctimes@wijeya.lk

**Cover & Layout Design**
R.Vinothini

**Editorial Coordinator**
R.R.Jeyakeshan

**Assistant Publishing Manager**
Sunanda Karunaratna

**Production Manager**
Ashley Cooray

**Circulation Manager**
Rohan Fonseka

**Information Systems Manager**
Naveen Gunaratne

**Desktop Publishing Manager**
Chandana Dasanayake

**Advertising Sales Manager**
Saaranga Wijeratne

**Subscription Executive/Sales**
Ranjith Rupasinghe

**Brand Manager**
Sujith Pathirannehe

wijeya newspapers
helping shape opinions

**Printers & Publishers**
WIJEYA NEWSPAPERS LTD
No.08, Hunupitiya Cross Road,
Colombo-02,
Sri Lanka
Tel: +94 11 2314714
email: pctimes@wijeya.lk


# எந்தத் தீமையிலும் ஒரு...

நவீன உலகின் தொழில்நுட்ப வளர்ச்சிகள் தொடர்பாக ஒரு காலத்தில் கடுமையான விமர்சனங்களும் முன்வைக்கப் பட்டிருந்தன. 'பூகோளமயமாதல்' செயற்பாடுகளின் கீழ் உலகம் ஒரு கிராமமாகிறது என்ற மாயையில், அதிகார வர்க்கத்தின் சிந்தனைகள் அனைவர் மீதும் திணிக்கப் படுகிறது என்ற குற்றச்சாட்டு வலிமையாக முன்வைக்கப் பட்டிருந்தது.

'பூகோளமயமாதல்' திட்டத்தை வகுத்தவர்களிடம் இது போன்ற ஒரு சிந்தனை இருந்திருந்தாலும், இவர்களுடைய ஆசீர்வாதத்துடன் வளர்க்கப்பட்ட நவீன தகவல் தொழில் நுட்ப அந்தச் சிந்தனைக்கு "ஆப்பு" வைத்து விட்டது.

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி கள் எல்லாம், பொருளாதார வசதி படைத்த ஒரு சிலரின், அல்லது ஒரு சில நாடுகளின் கைகளில் குவிவதால், உலகம் முழுவதற்குமான சிந்தனைகளை இவர்களே கட்டுப்படுத்தி விடுவார்கள் என்பதுதான் பூகோளமயமாதல் செயற்பாடு களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கான அடிப்படை. ஆனால், தகவல் தொழில்நுட்பத்தின் ஆரம்ப கட்ட வளர்ச்சியில் தென்பட்ட இத்தகைய அபாயங்கள் எல்லாம் இப்போது தவிடுபொடியாக்கப்பட்டு வருகின்றன. தகவல்களை ஒரு சிலர் கட்டுப்படுத்திவிட முடியாதபடி, இன்று தகவல் தொழில்நுட்பம் பல சாத்தியக்கூறுகளை அனைவருக்கும் வழங்கியிருக்கிறது.


ஒரு சில அதிகார, வசதி படைத்தவர்களினால் கட்டுப் படுத்தப்படும் ஊடகங்களினால் பரப்பப்படும் தகவல்களுக் குச் சவாலாக, எவரும் தாமறிந்த உண்மையை உலகறியச் செய்வதற்கு வசதியாக இணையத்தளத்தில் Blog வசதி வந்துவிட்டது.

"பில் கேட்ஸ்" என்ற கோடீஸ்வரனின் கைகளில் குவிந்தி ருந்த Computer Operating System மற்றும் மென் பொருள்கள் மீதான தனிமனித அதிகாரத்தை உடைத்து, எவருக்கும் அவை இலவசமாகக் கிடைக்கக்கூடியதாகவும், யாரும் அதனை தாம் நினைத்தவாறு மாற்றிப் பயன்படுத்தக் கூடியதாகவுமான வசதிகளை Open Source செயற்பாடுகள் உருவாக்கியுள்ளன. இவற்றின் நீட்சியாக, Wikipedia என்கின்ற இணையவழி கலைக்களஞ்சிய வசதியும் இன்று பிரபலமாகி வருகிறது.

எந்தத் தீமையிலும் ஒரு நன்மை உண்டு என்பதுபோல், எதை தாம் தீமையாகக் கருதினாலும், அது நாளை நமக்கு நன்மை பயப்பதாக மாறிவிடலாம் என்பதற்கு தகவல் தொழில்நுட்பம் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

தனக்குத் தீமை பயக்கக்கூடிய எதையும், நன்மை பயப்பதாக ஆக்கிக்கொள்ளும் திறன் மனிதனிடத்தில் இருக்கும் வரை, எந்தத் தீமையும் அவனுக்கு பாதிப்பை ஏற்படுத்திவிட முடியாது.

– ஆசிரியர்




# உள்ளே...



செய்திகள் ................................ 03

இணையத்தில் இனிய தமிழ் .......... 04

கிரடிட்கார்ட் மோசடி கவனம்! ....... 08


கணினிக்கும் காய்ச்சல் வரும் ....... 10



Internet பயன்படுத்த ................ 12






MS Word ................................ 14

Photoshop புதுமைகள் ............. 16




Ms Excel ................................ 18

Mail Box ................................ 20

Help Desk ............................ 22

Entertainment Page ............... 24

Wireless Technology .............. 26


Wikipedia ............................ 29




## இலங்கையில் Adobe தயாரிப்புக்கள் அறிமுக நிகழ்வு



Adobe மென்பொருள்களின் இலங்கைக்கான முகவர்களாகவும், பயிற்சி வழங்கல், மற்றும் மேலதிக சேவை வழங்குநர்களாகவும் தெரிவு செய்யப் பட்டுள்ள Tech Distribution Lanka (PVT) Limited நிறுவனத்தினர், Adobe தயாரிப்புக்களை இலங்கையில் அறிமுகம் செய்துவைக்கும் நிகழ்வு ஒன்றை ஜூன் 8ஆம் திகதி பத்தரமுல்ல Waters Edges விடுதியில் நடாத்தினர்.

Microsoft தயாரிப்புக்களின் விநியோகத்தர்களாக மாலைதீவு, புறூனே ஆகிய நாடுகளில் செயற்பட்டுவந்த Tech Distribution நிறுவனத்தினர் 2003ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் செயற்பட்டு வருகின்றனர். Microsoft தயாரிப்புக்களின் தொழில்நுட்பம், திறன் வளர்ச்சி, பயிற்சி வழங்கல், விற்பனை உதவி ஆகிய சேவைகளை இந்த நிறுவனத்தினர் இலங்கையில் வழங்கி வருகின்றனர்.

Adobe மென்பொருள்களான, Adobe Photoshop, Adobe Acrobat Reader, Adobe Illustrator, Adobe Acrobat Professional போன்றவை, அச்சுத்துறை, Image Printing, Video Film மற்றும் Digital Image செயற்பாடுகளில் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. அமெரிக்க நிறுவனமான Adobe Systems நிறுவனத்தின் சேவைகளை இலங்கைக்கு வழங்கும் நோக்குடன் நடாத்தப்பட்ட இந்த நிகழ்வில், Adobe India வின் முக்கிய உறுப்பினர்களும், Tech Distribution நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

## சிங்களம், தமிழில் நவீன Nokia கைத்தொலைபேசிகள்




சிங்கள மொழியிலேயே முழு அளவில் பயன்படுத்தக்கூடிய (Sinhala language User interface) Nokia கைத்தொலைபேசிக் கருவிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இலங்கையில் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது. இந்தத் தகவலை Nokia நிறுவனத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய பாவனையாளர் மற்றும் விற்பனைச் செயற்பாடுகள் பொதுமுகாமையாளர் Prem Chand வெளியிட்டுள்ளார்.

தமிழ் மொழியில் கையாளக்கூடிய Nokia தொலைபேசிகள் ஏற்கனவே பாவனைக்கு வந்துவிட்டதாகக் கூறும் அவர், சிங்கள மொழியில் கையாளக்கூடிய Nokia தொலைபேசிகளைத் தயாரிக்கும் திட்டத்தில் தாம் கடந்த 15 மாதங்களாக ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்தார்.

"ஏற்கனவே இந்தப் பணிகள் நிறைவடைந்துவிட்டன. எனினும் இதில் பெருமளவு உயர் மொழிக் கையாள்கையே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை நாம் பின்னரே உணர்ந்துகொண்டோம். எனவே, நாளாந்த வாழ்வின் மொழிப்பிரயோகத்துடன் கூடியதாக இந்தத் தயாரிப்பை மேலும் செழுமைப்படுத்தும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்று தெரிவித்துள்ளார் Nokia நிறுவனத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய பாவனையாளர் மற்றும் விற்பனைச் செயற்பாடுகள் பொதுமுகாமையாளர் Prem Chand.

சொந்த மொழியிலேயே கைத்தொலைபேசிகளைக் கையாளக்கூடிய வசதி அறிமுகப்படுத்தப்படுவதன்மூலம், கிராமிய மட்டங்களுக்கும் கைத்தொலைபேசிப் பாவனையை அதிகரிக்கச் செய்யலாம் என்பது அவருடைய அசைக்கமுடியாத நம்பிக்கை.

## Microsoft Yahoo புதிய கூட்டணி?

தேடுபொறி (Search Engine) தொழில்நுட்பத்தில் Google நிறுவனத்தின் அபரிதமான வளர்ச்சி காரணமாக மிரண்டுபோயுள்ள Microsoft நிறுவனம், சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழுவது மேல் என்பதுபோல், Yahooவின் பக்கம் தனது நேசக்கரத்தை நீட்டியுள்ளதாம். Yahoo நிறுவனத்தின் ஒரு தொகுதி பங்குகளை வாங்குவதற்கான தனது விருப்பம் சம்பந்தமாக Microsoft அண்மையில் அதனுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளது. எனினும் தற்போது இந்த பேச்சுவார்த்தைகள் கிடப்பில் கிடக்கின்றனவாம்.

Microsoft நிறுவனம் அண்மைக்காலமாக தேடுபொறி வணிகத்தினை புனருத்தாரணம் செய்து வருகின்றது. இதன் முக்கிய கட்டமாக மற்றொரு பிரபல தேடுபொறியான ask.com இன் முன்னாள் தலைமை நிறைவேற்று அதிகாரியான ஸ்ரீவ் பேர்க்விற்ஸ் என்பவரை தனது தேடுபொறி நிறுவனமான msn இன் தலைமைப் பொறுப்புக்கு நியமித்திருக்கிறது. கடந்த வருடத்தில் இருந்து Yahoo நிறுவனத்தின் குறித்த அளவிலான பங்குகளையேனும் வாங்கிவிடுவதற்கும் Microsoft பிரயத்தனம் செய்து வருகின்றது. அதற்குச் சாத்தியமான நிலைமைகள் பற்றி இரு நிறுவனங்களும் பேசியிருக்கின்றன. இதற்கு முன்னர் AOL இன் பங்குகளை வாங்குவதற்கு Microsoft நிறுவனம் முயற்சித்திருந்தது. அதற்கு Google நிறுவனம் ஒரு பில்லியன் டொலர் பேரம் பேசியிருந்தது. பில் கேற்சும் ஒருவகையில் பழுத்த அரசியல்வாதிதானே.



## தமிழ் தகவல் தொழில்நுட்பம்



# இணையத்தில் இனிய தமிழ்

த.தவரூபன்

சென்ற இதழில் யுனிக்கோட் தமிழ் எழுத்துரு பற்றியும் அதன் பயன்பாடு பற்றியும் விரிவாகத் தந்திருந்தோம். இந்த யுனிக்கோட் தமிழ் எழுத்துருவுக்கு எமது கணினியை ஒத்திசைவாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் என்னவென்னவென்று பார்த்தோம். இதற்கான சில தமிழ் மென்பொருள்கள் பற்றியும் கூறியிருந்தோம். இம்முறை மேற்குறிப்பிட்ட சில மென்பொருள்களின் (சொப்ட்வெயார்கள்) பயன்பாடு பற்றி சில விடயங் களைப் பார்ப்போம்.

### கீமான்
### (Tavultesoft Keyman 6.0)




எமது விசைப்பலகையினை தமிழ் யுனிக்கோட் எழுத்துக்களுக் குரிய இலக்கங்களுக்கு மாற்றிய பின்னர் தட்டச்சு செய்வோமா யின் யுனிக்கோட் எழுத்துக்களாக கணினியில் பதிவாகும் என கூறி னேன்.சாதாரண விசைப்பலகை யினை தற்காலிகமாக யுனிக்கோட் விசைப்பலகையாக மாற்றும் சொப்ட்வெயார் தான் இந்த கீமான். இதனை கணினியில் நிறுவினால் இது கணினியின் **System tray** (நேரம் தெரிகின்ற கீழ் மூலைபகுதி)யில் வந்து விடும். இதனை கணினி தொடங் கும் போதே தொடக்கிவிடுவது நல்லது. கீமானின் புதிய பதிப்பு கீமான் 6.0 ஆகும். இதனை நிறுவிய பின்னர் உங்களுக்கு தேவையான விசைப்பலகை வடி வங்களை கணினியில் நிறுவ வேண்டும். அதாவது பாமினி வடிவமா அல்லது திஸ்கி ஆவரங் கால் வடிவமா அல்லது அஞ்சல் வடிவமா என்பதை நீங்கள் தெரிவு செய்து அதற்குரிய கோப்பை கணினியில் நிறுவ வேண்டும்.




உங்களுக்கு எந்த முறையில் தட்டச்சு செய்யத் தெரியுமோ அந்த வடிவத்தையோ அல்லது எல்லாவற்றையுமோ நிறுவலாம், பின்னர் குறுக்குவழிகள் மூலம் விரும்பிய வடிவத்துக்கு மாற்ற லாம்.

இந்த கீமான் மென்பொருளை யும் மேற்சொன்ன விசைப்பலகை வடிவங்களையும் http://www.jaffnalibrary.de/tools அல்லது http://tamilsoft.webtamilan.com என்ற இணையத்தள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். முதலில் கீமானை நிறுவிய பின்னர் விசைப் பலகை வடிவங்களை நிறுவ வேண் டும்.




## எப்படி யுனிக்கோட்டில் தட்டச்சு செய்வது?

மேற்சொன்ன கீமானை ஆரம்பித்த பின்னர் இதனுடைய System Tray புகு வழியில் கொடுக்க விசைப்பலகை வடிவங்கள் தெரியும் (உ-ம்: **No Keyman Keyboard,Puthuvai Bam Uni**) இதில் விரும்பியதை தெரிவு செய்துவிட்டு தட்டச்சு செய்யலாம். அப்போது எங்கள் எழுத்துக்கள் யுனிக்கோட் எழுத்துக்களாக தட்டச்சு செய்யப்படும். இப்படித் தெரிவுசெய்வதற்கு குறுக்கு வழிகளையும் நிர்ணயிக்கலாம். அதாவது பாமினி வடிவத்தில் விசைப் பலகையினை மாற்றி அதனூடாக யுனிக்கோட்டில் தட்டச்சு செய்யவேண்டுமாயின் விசைப்பலகயில் எந்தெந்த விசைகளை அழுத்தவேண்டும் என்பதை முன்பே நிர்ணயிக்கலாம். அப்படி நிர்ணயித்தால் சொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

இதற்கு நீங்கள் குறித்த **System Tray** கீமானில் வலது சொடுக்கல் செய்து பெறும் பகுதியில் **Keyman Configeration** என்பதை




சொடுக்கினால் கிடைக்கப்பெறும் சாளரத்தில் **Installed keyboards** என்ற பகுதியை அவதானிக்கவும். அங்கே நீங்கள் நிறுவிய விசைப் பலகை வடிவங்கள் காணப்படும். ஒவ்வொன்றையும் தெரிவுசெய்து விட்டு அருகில் உள்ள தெரிவில **Ctrl** அல்லது **Shift** அல்லது **Alt** என்ற விசையுடன் எந்த எழுத்தை யாவது தெரிவு செய்து **OK** யினை அழுத்த குறித்த குறுக்குவழி நிர்ணயிக்கப்படும்.

மேலும் கணினி தொடங்கும் போதே இந்த கீமானையும் தொடக்கிவிடுவதற்கு மேற்சொன்ன சாளரத்திலேயே **Options** என்ற பகுதியில் **Start Keyman with windows** என்பதை தெரிவு செய்துவிட்டால் சரி. அத்துடன் **Options** பகுதியில்தான் மீண்டும் சாதாரண விசைப்பலகை வடிவத்துக்கு மாற்றுவதற்கான குறுக்கு வழியினை நிர்ணயிக்க முடியும்.

## தமிழ் எழுத்துரு மாற்றிகள்

ஏற்கனவே முன்னைய தமிழ் எழுத்துருக்களினைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஆவணங்களையும் இணையப் பக்கங்களையும் எவ்வாறு புதிய யுனிக்கோட் தமிழ் எழுத்துருவில் உள்ளதாக மாற்றுவது என்பது தான் பிரச்சினை. மீண்டும் இவற்றினை புதிய யுனிக்கோட் தமிழில் தட்டச்சு செய்வது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது. சிறுவரிகள், சொற்கள் எனில் தட்டச்சு செய்யலாம். பெரியளவிலான கட்டுரைகள் ஆவணங்களை என்ன செய்வது? அவற்றை மீண்டும் யுனிக்கோட் தமிழில் தட்டச்சு செய்வது என்றால் செலவு உண்டாகும். அப்படியாயின் என்னதான் தீர்வு

எம் தமிழ் இணைய வல்லுனர்கள் சளைத்தவர்கள் அல்ல. இதற்கும் தீர்வு கண்டு இருக்கிறார்கள். இதற்காக சிறு செயலிகள், மென்பொருள்களை வடிவமைத்திருக்கிறார்கள். இவற்றின் மூலம் முன்னரே பல்வேறு தமிழ் எழுத்துருக்களைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்ட இணையப் பக்கங்களின் உள்ளடக்கத்தை, ஆவணங்களை யுனிக்கோட்டு தமிழ் எழுத்துருவுக்கு மாற்றிக் கொள்ளலாம். இது மட்டுமல்லாமல் இன்னும் பழைய தமிழ் எழுத்துருவில் தான் தட்டச்சு செய்வோம் என்று அடம் பிடிப்பவர்களையும் இந்த செயலிகள் அனுசரித்துப் போகின்றன. பழைய தழிழ் எழுத்துருவில் தட்டச்சு செய்து தருபவற்றை யுனிக்கோட் தமிழ் எழுத்துருவுக்கு மாற்றித் தருகின்றன இந்த செயலிகள்.

## சிக்கல்கள்

ஆனால், இங்கும் சில சிக்கல்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஒரு ஆவணம் பழைய தழிழ எழுத்துருவான பாமினியிலும் இடையிடையே பாவிக்கப்படும் ஆங்கிலச் சொற்கள் ஏரியல் (Arial) ஆங்கில எழுத்துருவிலும் தட்டச்சு செய்யப்படுகின்றது என வைத்துக்கொள்வோம்.

இதனை யுனிக்கோட் எழுத்துருவுக்கு மாற்றும்போது அனைத்தும் தமிழில் தான் வெளியீடாக வரும். அவ்வேளை ஆங்கிலச் சொல் குழம்பிய 'தமிழில் (பொருளற்ற) வெளியீடாகும். ஆனால் TSC, அஞ்சல், Tab/Tam எழுத்துருக்களைப் பாவித்த ஆவணமாக மூல ஆவணம் காணப்படின் யுனிக்கோட்டுக்கு மாற்றப்படும்போது ஆங்கிலச் சொற்கள் அப்படியே ஆங்கில யுனிக்கோட்டு எழுத்துருவில் அமைந்து வெளியீடு கிடைக்கும்.


சரி, இந்த மென்பொருள்கள், செயலிகள் யாவை? இவை எங்கு கிடைக்கின்றன? எப்படிப் பயன்படுத்துவது? இவை இயல்பாகவே உங்களுக்குள் எழவேண்டிய கேள்விகள்

## புதுவை தமிழ் மாற்றி

எமது நாட்டவரும் தற்போது புலம்பெயர்ந்து வாழ்பவருமான சுரதா.யாழ் வாணனின் கைவண்ணத்தில் உருவான புதுவை யுனிக்கோட் மாற்றி இந்தச் செயலிகளில் ஒன்று.

இது http://www.suartha.com என்ற இணையத்தள முகவரியில் கிடைக்கிறது. இது ஒரு இணையப் பக்க செயலி. இதனை கணினியில் நிறுவவேண்டிய அவசியம் இல்லை. மேற்படி இணைய முகவரியினை இணைய உலாவியில் (Browser) தட்டச்சு செய்து திறந்து வைத்துக் கொண்டே பயன்படுத்த லாம்.

அல்லது, மேற்படி இணையப் பக்கத்தை எமது கணினியில் சேமித்து [File மெனுவில் Save As. என்பதை சொடுக்கி இதனை செய்யலாம்] இணைய இணைப்பு அற்ற நிலையிலும் பயன்படுத்தலாம்.




## எவ்வாறு பயன்படுத்துவது?

குறித்த இணையப்பக்கத்தில் இரண்டு சொல் பெட்டிகள் (Text Boxes) காணப்படும். இவற்றுக்கு நடுவில் சில எழுத்துருக்களின் பெயர்கள் உள்ளிட்ட தெரிவுகள் காணப்படும். மேல் உள்ள சொல் பெட்டியில் யுனிக்கோட் தமிழுக்கு மாற்றப்படவேண்டிய அதாவது வேறு ஒரு தமிழ் எழுத்துருவில் தட்டச்சு செய்த வசனத்தை, எழுத்தை, பந்தியை குறித்த மூல ஆவணத்தில் இருந்தோ இணையப் பக்கத்தில் இருந்தோ தெரிவு செய்து பிரதிசெய்து கொண்டு வந்து ஒட்டவேண்டும் (Paste).

பின்னர், மேற்பெட்டியில் கொண்டுவந்து சேர்க்கப்பட்ட மாற்றப்பட வேண்டிய விடயம் எந்த எழுத்துருவில் தட்டச்சு செய்யப்பட்டிருக்கின்றதோ அந்த எழுத்துருவின் பெயர் அல்லது அந்த எழுத்துரு வகையின் பெயர் கொண்ட தெரிவினைச் சொடுக்க வேண்டும். அப்போது கீழுள்ள பெட்டியில் மேலுள்ளதன் யுனிக் கோட் வடிவம் கிடைக்கும். அதனை கீழ் உள்ள Copy என்ற விசையினை சொடுக்கி பிரதி செய்து தேவையான இடங்களில் யுனிக்கோட் ஆவணங்களில் பயன்படுத்தலாம்.

இதில் இன்னும் ஒரு விசேடம். பல இணையப் பக்கங்களில் எம்மால் குறித்த தமிழ் உள்ளடக்கங்களை குறித்த எழுத்துரு எமது கணினியில் இன்றி வாசிக்க முடியாமல் இருக்கின்றது. அந்நேரங்களில் குறித்த பகுதியை பிரதிசெய்து மேற்குறித்த செயலியினைப் பயன்படுத்தி முதலாவது பெட்டியில் அதனை இட்டு கீழ் உள்ள தெரிவுகளில் ஏதேனும் ஒன்றை கீழ் பெட்டியில் யுனிக்கொட் தமிழில் தெரியும் வகையில் சொடுக்கி வாசித்தறியலாம். எனவே இச் செயலி அவசரத்துக்கு வாசிக்க உதவும் செயலியாகவும் தொழிற்படுகின்றது.


இதைவிட, நாம் அம்மா என்பதை ammaa என்று தட்டச்சு செய்யும் பழக்கமுடையவர்களாக இருப்பின், முதலில் பெட்டியில் அப்படி தட்டச்சு செய்துவிட்டு கீழே Romanised என்ற தெரிவை சொடுக்கினால் அது கீழுள்ள பெட்டியில் யுனிக்கோட் தமிழில் தெரியும். ஆச்சரியம் இல்லையா?

மேற்குறித்த சுரதா தழிழ் வாணன் அவர்கள் குறித்த தமிழ் செயலியினை விடவும் பல சிறு செயலிகளை உருவாக்கியிருக்கின்றார். அவை எழுத்துருக்களை ஒன்றில் இருந்து இன்னொன்றுக்கு மாற்ற வழிசெய்கின்றன. ஏன் யுனிக்கோட்டில் இருந்து பாமினிக்கும் மாற்றமுடியும் (அச்சு வேலைகளுக்கு யுனிக்கோட் இன்னும் ஒத்திசைவாக்கம் பெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது). இவற்றை www.jaffnalibrary.de/tools/ என்ற இணைய முகவரியில் சென்று இணைய பக்கங்களாகவே சேமித்துக் கொள்ளலாம்.

மேற்குறித்த தெரிவுகளின் பெயர்கள் பல இணையத்தளங்களின் பெயர்களையே கொண்டிருக்கின்றன. அது குறித்த இணையத்தளத்தினால் பாவிக்கப்படும் எழுத்துருக்களை கொண்டு தட்டச்சு செய்தவற்றை யுனிக்கோட் தமிழில் மாற்றுவதற்கானவையாகும். இப்போது நம் நாட்டவரின் அதாவது ஈழத்தமிழரின் செயலி எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று உங்களுக்கு புரிந்திருக்கும். இவ்வாறு சத்தமின்றி இணையத்தில் யுத்தம் செய்து கொண்டிருப்பவர்களில் நம்நாட்டு தமிழரும் இருக்கின்றார்கள் என்றால் பெருமையாக இருக்கின்றதல்லவா?

## முரசு கோப்பு மாற்றி

சரி, இனி முரசு கோப்பு மாற்றி மென்பொருள் பற்றி நோக்குவோம் இதுவும் யுனிக்கோட் தமிழில் வெளியீடுகளை பெற்றுக் கொள்வதற்கான ஒரு மென்பொருளாகும். இது முரசு அஞ்சல் மென் பொருளின் ஒரு உப படைப்பாகும். இதற்கு சொந்தக்காரரர் மலேசியாவைச் சேர்ந்த திரு. முத்து நெடுமாறன் அவர்கள். இவர்தான் தமிழில் மின்னஞ்சல் அனுப்புவதற்கு என மென்பொருளை உருவாக்கிய இணைய முன்னோடி. தற்போது உலகத் தமிழ் தகவல் தொழில்நுட்ப மன்றத்தின் தலைவருமாவார்.




இந்த முரசு மாற்றியினை, முரசு அஞ்சல் 2000 இரண்டாம் பதிப்பை கணினியில் நிறுவுவதன் மூலம் பெறலாம். இதனை http://www.murasu.com/downloads/ என்ற இணைய முகவரியில் இருந்து இலவசமாக இணையப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இது a2ksecore, என்ற பெயர் உடைய exe கோப்பாகும். இதனை நிறுவும்போது கணினி ஆரம்பிக்கும்போது இவற்றையும் Run செய்ய வேண்டுமா என்ற கேள்வி கேட்கப்படும். அவ் வேளை ஆம் என்று கொடுத்தால் ஒவ்வொரு முறை கணினி இயங்க ஆரம்பிக்கும் வேளைகளில் தானாகவே முரசு மென்பொருள் இயங்க ஆரம்பித்து விடும் இல்லையெனில் start program ஊடாகத் தான் முரசு அஞ்சலை ஆரம்பிக்க வேண்டும்.





இது Run ஆக ஆரம்பிக்கும் போது ஒரு சாளரம் தோன்றும். அதில் Minimize என்ற விசையினை சொடுக்கினால் அது கணினியின் System tray பகுதியில் சிறு உருவக் குறியீடாக சுருங்கிக் கொள்ளும். தேவையான பொழுது அதில் வலது சுட்டி விசையை சொடுக்கினால் ஒரு மெனு கிடைக்கும். அதில் file converter என்பதை சொடுக்கினால் இன்னுமொரு சாளரம் தோன்றும் அதில் File என்ற பகுதியின் கீழுள்ள FileName பகுதியில் வேறு ஒரு தமிழ் எழுத்துருவின் உதவியுடன் தட்டச்சு செய்யப்பட்ட, சொல்




ஆவணத்தை (Text document) உரிய பாதையுடன் (Path) இட வேண்டும். இதற்குப் பதிலாக Pick File என்ற விசையினை சொடுக்குவதன் மூலம் குறித்த சொல் அல்லது வசனத்தைத் தெரிவு செய்துகொள்ளவும் முடியும். பின்னர் குறித்த சொல் அல்லது வசனத்தில் உள்ள விடயங்கள் எந்த எழுத்துருவில் உள்ளது என்பதனை Encoding என்ற பகுதியில் இருந்து தெரிவு செய்யலாம். தன்னியக்க முறையில் இருந்த தெரிவு செய்தலை மென்பொருளே கவனித்துக் கொள்ளும் வசதியும் அங்கு உண்டு. Auto Detect Encoding என்பதை தெரிவு செய்தால் இது நிகழும்.

பின்னர் To பகுதியில் எங்கு எந்தப் பெயரில் புதிதான எழுத்துருவுக்கு மாற்றப்பட்ட கோப்பை சேமிக்க வேண்டும். என்பதை File name பகுதியில் இடவேண்டும். Pick File விசையினை சொடுக்குவதன் மூலமும் இந்தச் செயற்பாட்டை செய்ய முடியும். இதன்போது Save சாளரத்தில் உள்ள File Name பகுதியில் மேற்கோள் குறிக்குள் கோப்பினது பெயரை அதனுடைய Extention உடன் இடுதல் சிறந்தது. (உதாரணம் "test.txt"). பின்னர் Encoding பகுதியில் எந்த எழுத்துருவுக்கு மாற்றப்பட வேண்டும் என்பதை தெரிவு செய்து Convert என்ற விசையினை சொடுக்கினால், உடனே புதிய எழுத்துருவுக்கு உங்கள் முன்னைய சொல் ஆவணம் மாற்றப்படும்.




## முடிவாக..

முரசு அஞ்சலில் இன்னும் பல சிறப்பான உப மென்பொருள்கள / செயலிகள் உள்ளன. அவற்றை எல்லாம் பெற்றுக்கொள்ள முரசு அஞ்சலுக்கான உதிரி மென்பொருளை நிறுவவேண்டும். அதனை மேற்சொன்ன இணைய முகவரியிலேயே பெற்றுக்கொள்ள முடியும். அது a3kse-plug என்ற பெயர்கொண்ட exe கோப்பாகும். இக்கட்டுரை முக்கியமாக யுனிக்கோட் தமிழை மையப்படுத்தியிருப்பதால் முரசு அஞ்சலின் ஏனைய தகவல்கள் வசதிகள் செயலிகள் பற்றி தனியாக ஆராய்வதே சிறப்பு எனக் கருதி இவ் விடத்தில் தவிர்க்கின்றேன்.


தமிழ் கணினி .உலகில் யுனிக்கோட் மட்டுமல்ல எத்தனையோ புதுமைகள் நிகழ்ந்தவண்ணம் உள்ளன.அவைபற்றி பல தகவல்களை நீங்கள் www.suratha.com , tamilsoft.webtamilan.com , www.araichchi.net ,www.ezilnila .com போன்ற இணையத்தளங்களில் பார்வையிட முடியும்


நாம் எமது தமிழை இணையத்தினூடாக வளர்த்தெடுக்க வேண்டுமெனில் நிச்சயம் நாம் யுனிக்கோட் (சீர்மை) எழுத்துருவில் இணையப் பக்கங்களை மாத்திரமல்ல ஏனைய ஆவணங்களையும் உருவாக்க வேண்டும். முன்பு உருவாக்கியவற்றை புதிய தொழில்நுட்பத்துக்கு ஏற்றவகையில் மாற்றவேண்டும். அதற்கு மேற்சொன்னவைகள் போன்ற செயலிகளும், யுனிக்கோட் தமிழ் எழுத்துக்களும் எமது கணினியில் இருக்கவேண்டும். அதற்கு இதுவரை நான் தந்த தகவல்கள் போதும் என்றே நம்புகின்றேன். இது சம்பந்தமாக எவ்விதமான சந்தேகங்கள், மயக்கங்கள் உங்களிடம் நிலவினாலும் அவை தெளிவாக்கப்பட வேண்டும். அப்படி இருப்பின் அவற்றை எமக்கு அஞ்சலிடுங்கள் அல்லது மின்னஞ்சலிடுங்கள். விளக்கம் தரப்படும்.

# கிரடிட்கார்ட் மோசடி கவனம்!




-தவா-





அடுத்த தடவை உங்கள் கிரடிட் கார்ட் (கடனட்டை) இனை விற்பனைப் பிரதிநிதியிடம் கொடுப்பதற்கு முன்னர் ஒருதடவையேனும் சிந்திக்க வேண்டும் என்று கூறுகிறது இந்தச் சம்பவம். அண்மையில் இந்தியாவின் மும்பாய் காவல்துறையினரால் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்ட இந்த உயர் தொழில்நுட்ப கிரடிட் கார்ட் மோசடியானது எதிர்காலத்தில் இவ்வாறான மோசடிகள் பெரியளவில் இடம்பெறுவது சாத்தியமே என்பதை எடுத்துக் காட்டியிருக்கின்றது.

நான்கு இளைஞர்கள் இந்த மோசடியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இவர்களில் இருவர் சொப்ட்வெயார் எஞ்சினியர்கள் (Software Engineers). இவர்கள் நால்வரும் இணைந்து இலகு முறையில் பணம் சம்பாதிக்க எடுத்த முயற்சி ரூபா 4 இலட்சம் (இந்திய பெறுமதி) வரையில் மோசடி செய்யப்பட்டுவிட்ட நிலையில் காவல்துறையினரின் வலையில் சிக்கியுள்ளது. இவர்களில் ஒருவர் அமெரிக்காவிற்கு மென்பொருள் நிறுவனத்தில் வேலைக்கு செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகிய நிலையில் கைதாகியிருக்கிறார்.



இந்த இளைஞர் குழுவின் முக்கிய சூத்திரதாரி 19 வயதுடைய லியோ பவுல் என்பவராவார். பண்ரா கல்லூரியில் 2ம் வருட பொறியியல் மாணவரான இவர், மின்காந்த அட்டை வாசித்தறியும் சாதனம் பற்றி இணையத்தில் வாசித்தறிந்திருக்கிறார். இந்தச் சாதனத்தில் கார்ட் ஒன்றை இழுத்தால் அதனுடைய தகவல்கள் அனைத்தையும் அது தன்னகத்தே சேமித்து வைக்கக் கூடியது என்றும், இதில் அவ்விதமாக 12 "கார்ட்"களின் தகவல்களை ஒரே தடவையில் சேமிக்க முடியும் என்றும் அறிந்திருக்கிறார். வாடிக்கையாளர்களின் "கார்ட்"களில் இருந்து அனைத்துத் தகவல்களையும் இவ்வாறு சேகரிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்திய பவுல், தன்னுடன் மற்றைய மூவரையும் கூட்டுச் சேர்த்திருக்கின்றார். பின்னர் அந்தச் சாதனத்தை இணையத்தளத்தின் மூலம் அமெரிக்காவில் இருந்து வாங்கியிருக்கின்றார். சீனத் தயாரிப்பான இவ்வாறான சாதனங்கள் இந்தியாவில் கிடையாது. இதன் விலை இலங்கை ரூபாயில் சுமார் 45000 தேறும்.

கிங்ஸ் இன்ரநஷனல் ஹோட்டலில் உள்ள 'வெயிற்றர்' ஒருவரை தமது மோசடிக்கு இவர்கள் உடந்தையாக்கியிருக்கின்றனர். குறித்த வெயிற்றர் அந்த ஹோட்டலுக்கு ஒவ்வொருமுறை உணவருந்த வந்து கிரடிட்கார்ட் மூலம் பணம் செலுத்துபவர்களிடமும் பெறும் கார்ட்டை 6 அங்குலத்துக்கும் குறைந்த நீளமானதும், பொக்கட்டில் கொண்டுசெல்லக்கூடியதுமான பவுல் கொடுத்துவைத்த சாதனத்தில் ஒருதடவை இழுத்துப் பதிந்துவிட்டுத்தான் கொடுப்பார். பிறகென்ன தகவல்கள் அனைத்தும் அதில் பதிவாகிவிடும். இதனைப் பின்னர் பவுலிடம் கொண்டுவந்து கொடுப்பார். பவுல் சாதனத்தை தனது கணினியில் இணைத்து அதிலிருந்து தகவல்களை இறக்கிவிட்டு மீண்டும் வெயிட்டரிடம் கொடுப்பார்.

இவ்வாறு இறக்கப்பட்ட தகவல்களை கள்ளச்சந்தையில் கிடைக்கும் வெற்று அட்டைகளில் மற்றைய இளைஞர் ஏற்றுவார். இப்போது பிரதிசெய்யப்பட்ட கடனட்டை பயன்படுத்துவதற்குத் தயாராகிவிடும். இதனை உபயோகித்து தானியங்கி இயந்திரங்களில் இருந்து பணமும் எடுக்க முடியும், எந்த வியாபார நிலையத்திலும் அதனைப் பயன்படுத்தவும் முடியும்.


இவ்வாறு இவர்களின் மோசடி 22 அட்டைகளில் நடந்தேறிவிட்டது. எப்படி இது வெளிச்சத்துக்கு வந்தது என்றுதானே கேட்கிறீர்கள். HSBC வங்கி அதிகாரிகள் காவல்துறைக்கு அறிவித்த பின்னர்தான் காவல்துறையினர் உசாரானார்கள். பிரதிசெய்யப்பட்ட கடனட்டைகளின் உண்மையான உரிமையாளர்கள் அனைவரிடமும் விசாரணை நடத்தியதில், இவர்கள் அனைவரும் மேற்சொன்ன கிங்ஸ் இன்ரர்நஷனல் ஹோட்டலில் உணவருந்திவிட்டு கடனட்டை மூலம் பணம் செலுத்தியிருக்கின்றனர் என்பதைக் கண்டு கொண்டனர்.

காவல்துறையினருக்கு இது போதுமே. விரைந்து விசாரணைகளை முடுக்கி குறித்த வெயிட்டரை கைதுசெய்ய, அவன் மிகுதி 4 இளைஞர்களையும் வஞ்சகமில்லாமல் காட்டிக்கொடுத்திருக்கிறான்.

இப்போ லியோ பவுல் (வயது 19), ஆகாஸ் கம்பல்(வயது19), மனோஜ் சாயுகான்(வயது24), மகேஸ் வலனி (வயது20) ஆகிய நால்வரும் காவல்துறையினரின் பிடியில்.

இது இந்தியாவில் தானே என்று சும்மா இருந்துவிட முடியுமா? எதற்கும் அவதானமாக இருங்கள்.

# Adobe Acrobat




வேறுபட்ட மென்பொருள்களினால் ஆக்கப்பட்ட ஆவணங்களை வாசிப்பதற்கும், எழுதுவதற்குமான ஒரு cross-platform மென்பொருளே இதுவாகும். அச்சு வடிவிலான வெளியீட்டுக்காக ஆக்கப்பட்ட ஆவணங்களை இணையத்தினூடாகப் பரிமாறிக் கொள்வதற்கு Adobe Acrobat உதவுகிறது. ஆவணங்களின் வடிவமைப்பை மாற்றாமலும், அந்த ஆவணம் உருவாக்கப்பட்ட மென்பொருளின் உதவி இல்லாமலும் அதனைப் பார்வையிட இந்த மென்பொருள் உதவுகிறது. உதாரணமாக, Office Applications ஆன, Word, Excel ஆவணங்களானாலும் சரி, அல்லது QuarkXPress போன்ற Desktop Publishing ஆவணங்களானாலும் சரி, அவற்றை நாம் PDF (Portable Document Format) வடிவத்துக்கு மாற்றி வாசிக்கவோ, அல்லது யாருக்கும் அனுப்பவோ Adobe Acrobat உதவுகிறது.

www.adobe.com என்ற இணையத்தளத்திலிருந்து இலவசமாக இறக்கிக் கொள்ளக் கூடிய Acrobat Reader மென்பொருளைக் கொண்டு எத்தகைய ஆவணத்தையும் கணினித் திரையில் நாம் பார்வையிடலாம். PDF வடிவத்தில் இணையத்தில் இணைக்கப்பட்டிருக்கும் (Hyperlinked) ஒரு ஆவணத்தை சாதாரணமாக ஒரு இணையப் பக்கத்தைத் திறப்பது போல Internet Browser திறந்துவிடும். இந்த PDF வடிவ கோவைகளை Hard Disk இல் சேமித்து வைக்கவோ, அல்லது பிரதி எடுக்கவோ(Print) முடியும். இந்த ஆவணங்களை Windows மற்றும் Macintosh ஆகிய இரண்டு வகை கணினிகளிலும் வாசிக்க முடியும். இந்த மென்பொருள், பெரிய அளவிலான ஆவணங்களை, தளசுதந்திரமான (Platform-Independent) ஆவணங்களாக (அதாவது, அவை எந்த மென்பொருளில் ஆக்கப்பட்டிருந்தாலும், அந்த மென்பொருளின் உதவியின்றியே பார்வையிடக் கூடிய ஆவணங்களாக) மாற்றுவதால், விசேடமாக வடிவமைப்புச் செய்யப்பட்ட கம்பனி அறிக்கைகள், மற்றும் விபரக் கொத்துக்களை (Designed company reports and brouchers)ப் பரிமாறிக்கொள்வதற்கு Adobe Acrobat பயன்படுத்தப்படுகிறது.

Adobe Acrobat ஐப் பயன்படுத்தி இணையத்தளங்களினூடாக Online விண்ணப்பப் படிவங்களையும் (eForms) தயாரிக்க முடியும். இத்தகைய விண்ணப்பப் படிவங்களை இணையத்திலிருந்து இறக்கி, தேவையான விபரங்களை நிரப்பி மீண்டும் இணையத்தினூடாகவே அனுப்பிவைக்க முடியும்.

# கணினிக்கும் காய்ச்சல் வரும்

R.R. Jeyakeshan




இன்றைய காலகட்டத்தில் கணினிகளைத் தாக்கும் வைரஸ் பற்றிய செய்திகள் எம்மை அடிக்கடி வந்தடைகின்றன. மிக நேர்த்தியாக உருவாக்கப்பட்ட கணினி வைரஸ்கள் எவ்வாறு உலகளாவிய கணினி வலைப்பின்னல்களையே தாக்குகின்றன என்பதில் இருந்து எமது கணினிகள் எவ்வளவு எளிதில் இவற்றால் ஆக்கிரமிக்கப்படக் கூடியன என்பது புலனாகின்றது.

2004 ஜனவரி மாத காலப்பகுதியில் Mydoom worm என்ற கணினி வைரஸ் கிட்டத்தட்ட 250,000 கணினிகளை ஒரே நாளில் தாக்கியது. அதேபோல் 1999 மார்ச் மாதத்தில் Melissa Virus இன் தாக்கம் Microsoft நிறுவனம் உட்பட பல பெரிய நிறுவனங்களின் மின்னஞ்சல் தொகுதியையே (email System) மூடும் அளவிற்கு மிக சக்தி வாய்ந்ததாக காணப்பட்டது. இதேபோல்தான் 2000ம் ஆண்டு ILOVEYOU வைரசும் தனது வேலையைக் காட்டியது.


இக்கட்டுரை, பாரம்பரிய வைரஸ் மற்றும் மின்னஞ்சல் வைரஸ் என்பவை பற்றி ஆராய்வதுடன், அவை எவ்வாறு உருவாகின்றன, எப்படி அவை கணினியைத் தாக்குகின்றன என்பதை விளக்குவதன் மூலம், உங்கள் கணினிகளை எப்படி இவற்றின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பது என்பது பற்றியும் விளக்க முனைகிறது.

கணினி வைரஸ்கள் மிக இலகுவான முறையிலேயே உருவாக்கப்படுகின்றன. இவற்றை தரம்பிரித்து தடுப்பது மிகச் சுலபம். ஆனால், புதுப்புது வழிகளை கையாண்டு காலத்திற்கு காலம் புதுப்புது முறைகளில் வித்தியாசமான வைரஸ்கள் உருவாக்கப் படுவதால், அவை எல்லாவற்றையும் தடுப்பது என்பது கடினமாகின்றது.










## வைரஸ் (Virus)


சாதாரண கணினி வைரஸ் என்பது ஒரு சிறிய மென்பொருள் (Software) ஆகும். இது கணினியில் காணப்படும் முக்கிய Program களில் தொற்றி ஒட்டுண்ணி போல் காணப்படும். உதாரணமாக, Ms Excel இல் உள்ள Spreadsheet இல் தொற்று ஏற்பட்டால், Spread sheet Program திறந்து பாவிக்கும் போதெல்லாம் இந்த வைரசும் உயிர்ப்படைந்து பல்கிப் பெருகும்.

## மின்னஞ்சல் வைரஸ் (e mail Virus)


மின்னஞ்சல் வைரஸ் ஆனது



மின்னஞ்சல்களினூடாக உலா வரும். இந்த வகை வைரஸ்கள், தொற்று ஏற்பட்டவரின் மின்னஞ்சல் முகவரிப் புத்தகத்தில் (e mail address book) சேமித்து வைத்துள்ள மின்னஞ்சல் முகவரிகளுக்கு தன்னிச்சையாக மின்னஞ்சலாகச் சென்றடைவதன்மூலம் தம்மைப் பல்கிப் பெருக்குகின்றன.


© Gunilla Elam

இதுவும் மிகச்சிறிய கணினி Program ஆகும். இது தன்னிச்சையாகப் பல்கிப் பெருகும் தன்மை அற்றது. இந்த வகை வைரஸ்கள் computer games வடிவங்களில் பரப்பப்படுகின்றன.




இந்த Program மை பயன்படுத்தினால் இது கணினியின் வன்தட்டில் (Hard disk) உள்ள அனைத்தையும் அழித்துவிடும். இவ்வகை Trojan horses களினால் கணினியில் தன்னிச்சையாக (Automatically) பெருக முடியாது என்பது ஒரு நற்செய்தி.

## பெயர்க்காரணம்

உயிரியல் வைரஸ் அதாவது உயிரினத்தில் தொற்றை ஏற்படுத்தும் வைரஸை ஒத்த சில இயல்புகளை கொண்டிருப்பதால் கணினியில் பாதிப்பை ஏற்படுத்தும் ...ன


உ... உயிர்களை தாக்கும் வைரஸ் என்பதையே குறிக்கிறது). இவ்வகை வைரஸ்கள் சிறிய பாதுகாப்பு உறையினுள் அடைக்கப்பட்ட DNA மூலக்கூறுகளின் சிறிய கூறுகள் அல்லது பாகங்களாகும். இவற்றினால் உயிர்க்கலம் போல தொழிற்படவோ, தன்னிசையாக இனப்பெருக்கம் செய்யவோ முடியாது. இவை உயிர்களை வந்தடையும் போது தமது DNA கூறை உயிரியின் கலங்களுக்குள் உட்செலுத்தி அவ்வுயிரின் உள்ளேயே தொழிற்பாட்டை உபயோகித்து தம்மை இனப்பெருக்கம் செய்து கொள்ளும்.

கணினி வைரஸ்களிலும் இவ்வகை உயிரியல் வைரஸ்களின் சில இயல்புகளை ஒத்த இயல்புகள் காணப்படுகின்றன. கணினி வைரஸ் ஆனது சில Program அல்லது document களுடன் இணைந்த பின்பு, அந்த program கள் அல்லது document பாவிக்கப்படும்போது மட்டுமே தொழிற்பட ஆரம்பிக்கும். இதன் பின்னரே அதனூடே மற்றைய கணினிகளையும் அது தாக்க ஆரம்பிக்கும்.

## "worm" என்றால் என்ன?

இதுவும் ஒருவகை Computer Program ஆகும். இது கணினி வலைப்பின்னலின் (Networks) ஊடாக ஒரு கணினியில் இருந்து இன்னோர் கணினிக்கு தம்மை பிரதியீடு (Copy) செய்வதன் மூலம் தாக்குகின்றது. இந்த வழியில் இவை பிரமிக்கத்தக்க வகையில் மிக விரைவாக பெருகக் கூடியவை. உதாரணமாக Code Red எனும் worm 2001 ஜுலை 19ம் திகதி ஒரே நாளில் 250,000 கணினிகளைத் தாக்கியது.

"worm" சாதாரணமாக மென்பொருள்களின் பாதுகாப்பு பகுதியில் உள்ள துவாரங்களினூடாக (Security holes) தொற்றை ஏற்படுத்துகின்றன. இங்கு துவாரம் என நான் குறிப்பிடுவது, மென்பொருள் பாதுகாப்புப் பகுதியில் உள்ள அதிகம் கவனிக்கப்படாத அல்லது அக்கறைப்படுத்தப்படாத பகுதியையேயாகும். உதாரணமாக, Slammer worm 2003 ஜனவரி மாதம் Microsoft SQL server இன் ஊடாக கணினிகளைத் தாக்கியது. இது வெறும் 376 bytes அளவைக் கொண்ட மிகச் சிறிய software program ஆகம்.



(அடுத்த இதழில் தொடரும்...)

# Internet





## பயன்படுத்த கணினி கொண்டிருக்கவேண்டிய வசதிகள்.


இலங்கையில் இன்று அனைத்து முக்கிய நகரங்களிலும் இன்டர்நெட் (Internet) இணைப்பு வசதி காணப்படுகிறது. இந்த இன்டர்நெட் இணைப்பை ஏற்படுத்துவதற்கு நமது கணினியில் சில அடிப்படை வசதிகளை நாம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அவை எவை என்பதுபற்றி இந்தக் கட்டுரை விபரம் தருகிறது.




நீங்கள் பயன்படுத்தும் கணினி Windows Operating System, Linux போன்ற Operating System கொண்டதாக அமைதல் வேண்டும். தற்போதைய Pentium Processor உள்ளதாக அமைதல் நல்லது. Processor இன் வேகத்தைப் பொறுத்தே CPU எனப்படும் Central Processing Unit இன் வேகம் அமையும். இது போதியளவு வேகத்தைக் கொண்டதாக இருந்தாலே, Web browsing பணிகளுக்கு பயன்படுத்தலாம். Hard Disk கின் கொள்ளளவு குறைந்தது ஒரு 1GB யாவது இருத்தல் வேண்டும். இணையப் பயன்பாட்டின்போது பல கோவைகளை (Files) சேமித்து வைத்துக் கொள்ளக்கூடிய தேவைகள் அதிகம் இருப்பதனால் இது அவசியம் ஆகும்.




Pentium Processor



Central Processing Unit

கணினியின் Monitor இன் Brightness மற்றும் Contrast, Controls ஐ சரிபார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில், வெப்தளத்தில் (World Wide Web) பெரும்பாலும் Graphics images அதிகமாக இருக்கும்.

### Modem




உங்களுக்கும் Internet கும் இடையிலான தரவுகளை (Data) ப் பரிமாறிக் கொள்ள உதவும் ஒரு வகைக் கருவிதான் Modem (Modem = Modulater demodulater). இதனைத் தெரிவு செய்யும்போது கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டிய விடயங்கள் மூன்று உள்ளன.

1. Data Speed
2. Forms
3. Standard Speed

மோடத்தின் வேகமானது தொலைபேசி இணைப்புக்களின் (Telephone line) மூலமாக தரவுகளை (Data) அனுப்பக்கூடிய திறனைப் பொறுத்தே அமைகிறது. வேகம் கூடிய ஒரு மோடத்தைப் பயன்படுத்தும்போது வெகு தொலைவிலுள்ள System த்திலிருந்து உங்களது System த்தில் ஒரு File ஐக் கொண்டுவர அதிகநேரம் காத்திருக்கத் தேவையில்லை. Web இல் Browsing செய்வதற்கு குறைந்தது 14,400 kb/s வேகமுள்ள Modem போதுமானது.

## Modem வடிவங்கள்

மூன்று விதமான வடிவங்களில் Modem கள் காணப்படுகின்றன.


1. Internal Modem
2. External Modem
3. கிரெடிட் கார்ட் அளவிலான PCMIA Cards

உங்களது System, Desktop System ஆக அமைந்தால் Internal/External இரண்டும் பயன்படுத்தலாம். Internal modem விலை குறைந்தது. ஆனால் External Modem சிறந்தது. நிறுவுவது எளிது. இதில் Status Light இருப்பதால் தகவல் பரிமாற்றத்தைத் தெரிந்து கொள்ள முடியும்.

## Standards

ஒரு மொடத்தை நீங்கள் பயன்படுத்தும்பொழுது அதேவகை சிக்னல்களையே மறுமுனையில் உள்ள மொடமும் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் ITU (International Telecom Communication Union) உருவாக்கிய தரத்தினையே (Standard) அனைத்து மோடம் தயாரிப்பு நிறுவனங்களும் பயன்படுத்துகின்றன.

தகவல்களை பிற கம்பியூட்டர்களுக்கு அனுப்பவும், வாங்கவும் முடிவதுடன், பிற தொலைநகல் (Fax) இயந்திரங்களுக்கு செய்திகளையும் பரிமாற்றிக் கொள்ளலாம். குறைந்தது *28,800* kbps வேகம் இருந்தாலே எந்த ஒரு மோடமும் மிகச் சிறப்பாக தொழிற்படக்கூடியது




## Internet Tips ..... Tips....

நீங்கள் சர்வதேச வலைப்பின்னலில் உள்ள பல்வேறு பக்கங்களில் அன்றாடம் உலாவரும் போதெல்லாம் அப் பக்கங்கள் பற்றிய தகவல் அடங்கிய தற்காலிக கோவைகள் (Temporary Files), உங்கள் (PC'S) கணினிகளில் தற்காலிகமாக சேமிக்கப்படும். இதன் நோக்கம் மீண்டும் இன்னோர் நேரம் நீங்கள் வலைப்பின்னலில் உலாவர எத்தனிக்கும் போது மிக விரைவாக முன்னர் உலாவிய பக்கங்களுக்குள் பிரவேசிக்க வழியமைக்கவே.


இச் செயற்பாட்டை "Browsing Centers", "Internet Cafe" போன்றவற்றில் இலகுவில் அவதானிக்கலாம். அதாவது நீங்கள் (Internet) வலைப்பின்னலை திறந்தவுடனேயே நீங்கள் தெரிவு செய்யாத ஏதாவது ஓர் பக்கம் (Site) எதிர்பாராத விதமாக திறந்து விடும். இது பெரும்பாலும் உங்களுக்கு முன்னர் பாவித்த வரால் உலாவந்த தளங்களாக இருக்கலாம்.

**இவற்றை தவிர்க்க இப்படிச் செய்யலாம்.**

* Internet Explorer இன் menu bar இல் உள்ள Tools ஐ கிளிக் செய்து அதில் "Internet Options" ஐ கிளிக் செய்யவும்.
* பின்னர் "General" எனும் பகுதியை தெரிவு செய்து "Temporary Files" எனும் பகுதியை இனங்காணவும்.
* இனங்காணப்பட்ட பகுதியில் உள்ள "Delete Files" எனும் (Button) பொத்தானை அழுத்த திறக்கும் திரையில் உள்ள "Delete all offline contant" ஐ தெரிவு செய்து "OK" ஐ கிளிக் செய்யவும்.

காரியம் கச்சிதம்

# மைக்ரோசொப்ட்




**Ms** Word மூலம் இலகுவாக செய்யக்கூடிய ஓர் காரியத்தை கடந்த இதழில் விபரித்தோம். சாதாரண கடிதம் ஒன்றை எவ்வாறு சற்றுக் கவர்ச்சியாக மெருகூட்டி பெறுவது என்பதை அதில் எடுத்துக்காட்டியிருந்தோம்.


இம்முறையும் அக்கடிதத்தையே வைத்து மேலும் சில அடிப்படை செய்முறைகளை விபரிக்கின்றோம்.

தட்டச்சு செய்து முடிக்கப்பட்ட கடிதத்தை கணினியின் வன்தட்டில் (Hard Disk) சேமித்து (Save) வைக்கலாம். இதனைச் செய்வதற்கு மூன்று வழிகளைப் பின்பற்றலாம்.

1. சாதாரண முறையில் விசைப் பலகை (Key board) மூலம்
2. சாதாரண முறையில் Mouse மூலம்
3. குறுக்கு வழி (Shortcut Key) மூலம்

1. சாதாரண முறையில் Key board மூலம்

Key Board இல் காணப்படும் Alt (Alter) Key இனை அழுத்த Main menu இல் உள்ள File அருட்டப்படும். பின்னர் Enter Key ஐ அழுத்தி அல்லது (↓) arrow Key ஐ அழுத்த பெறப்படும் List இல் (படம் A) Save எனும் சொல்லை (↓) Arrow Key இன் மூலம் தெரிவு (select) செய்து மீண்டும் Enter Key (↵) ஐ அழுத்த கீழ்காணும் கட்டம் தோன்றும் (படம் B).




(படம்A)

ஒ... Po... லது... கல... என...

பட... nar... தா... குறிப்பிட்ட கடிதத்திற்கு (File) கொடுக்கலாம்.

(கட்டாயம் ஓர் பெயர் அல்லது குறியீடு AA or AB ஆவது கொடுக்கப்பட வேண்டும். இப்படிக் கொடுப்பதன் நோக்கம் பின்னர் ஏதாவது ஓர் நேரத்தில் தேவைப்படும் இடத்து இப்பெயரை கொடுத்து குறிப்பிட்ட கடிதத்தினை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம்.)

பெயரைக் கொடுத்த பின்னர் நேரடியாக Enter Key ஐ அழுத்தினாலும் குறிப்பிட்ட File சேமிக்கப்படும் அல்லது Tab key இனை அழுத்துவதன் மூலம் Save இனை தெரிவு செய்த பின்னர் Enter ஐ அழுத்த குறிப்பிட்ட File ஐச் சேமிக்கலாம்.

**Main Menu ⇒ File → Save**

2) சாதாரண முறையில் Mouseஇன் மூலம்

Mouse ஐ பாவித்து இரண்டு வழிகளில் இத் தேவையை நிறைவேற்றலாம்.


a) Mouse இன் Pointerஐ Main Menu இல் உள்ள Fileஇல் கிளிக் செய்ய வரும் Menu List இல் (படம் A) Mouse Pointer ஆல் Save இன் மேல் வைத்து mouse இன் இடது பக்க (left) Botton ஐ கிளிக் செய்ய மேற்குறிப்பிட்ட கட்டம் தோன்றும் (படம் A). அதில் மேல் குறிப்பிட்டவைகளைச் செய்து முடித்த பின்னர் Save எனும் பொத்தானை Mouse Pointer ஆல் கிளிக் செய்ய குறிப்பிட்ட File சேமிக்கப்படும் (Save).

b) அல்லது Standard tool Bar இல் இடமிருந்து வலமாக மூன்றாவது இடத்தில் Floppy Disk உருவை Mouse Pointer ஆல் கிளிக் செய்ய Save As கட்டம் தோன்றும். மிகுதி முன்னர் குறிப்பிட்ட முறையிலேயே செய்யப்பட வேண்டும்.


3) குறுக்கு வழிகள் (Short Cut Key) மூலம்

கடிதத்தினை வடிவமைத்து முடிந்தவுடன் இலகுவாக Ctrl Key உடன் [S] Key ஐயும் இணைத்து அழுத்த Save As (படம் B) கட்டம் திறக்கப்படும். இதன் பின்னர் முன்னர் குறிப்பிட்ட வகையிலேயே அனைத்தும் செய்யப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட File ஐ கணினியின் வன்தட்டில் (Hard disk) சேமிக்காமல் Floppy Disk இல் சேமிக்க வேண்டுமானால் குறிப்பிட்ட Floppy disk ஐ கணினியில் Floppy Drive இல் உட்செலுத்திய பின்னர் மேற்குறிப்பிட்ட ஏதாவது ஒரு முறையில் Save As கட்டத்தினை திறந்து




(படம் B)



Save in எனும் கட்டத்தின் வலது பக்க மூலையில் உள்ள ↓ கீழ் நோக்கிய குறியை அழுத்தி $3^1/_2$ Floppy A: இனை தெரிவு செய்யவும்.

பின்னர் சாதாரணமாக Save செய்யும் படிமுறைகளை செய்து Enter key ஐ அல்லது Save எனும் பொத்தானை அழுத்த தாங்கள் தெரிவு செய்த Floppy Disk இல் Save செய்யப்படும்.



Save செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்ட File ஐ Print செய்து கொள்ள பின்வரும் முறைகளில் ஏதாவது ஒன்றை பின்பற்றலாம். அது பற்றி அடுத்த இதழில் விபரமாக பார்ப்போம்?

## அடிக்கடி SAVE பண்ண மறக்காதீர்கள்

கணினியில் கோவைகளை (File) உருவாக்கும்போது அல்லது உருவாக்கிய கோவையில் (File) வேலை செய்யும் போது அடிக்கடி SAVE பண்ண மறக்காதீர்கள். ஏனெனில், எவ்வேளையிலும் மின்சாரத்தடை அல்லது எதிர்பாராத தடங்கல்கள் ஏற்படலாம். அப்படியேற்படும் சந்தர்ப்பத்தில் கணினியானது மீண்டும் Restart ஆகையில் நீங்கள் வேலை செய்த கோவை (File) அல்லது தகவல் இல்லாமல் போய்விட அதிக வாய்ப்புண்டு. அதைவிட வேலை அனைத்தையும் செய்து முடித்த பின் SAVE செய்யும் போது கோவையின் அளவு பெரிதானால் SAVE செய்ய அதிக நேரம் எடுப்பதால் உங்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தலாம்.

SAVE செய்ய இரண்டு வழிகள் உண்டு

- கோவை (File) திறக்கப்பட்ட நிலையில் இருக்கையில் கணினி திரையின் மேல் பகுதியில் உள்ள Stadard Tool Bar இல் உள்ள 'SAVE' icon ஐ (Floppy உரு) கிளிக் செய்யவும்.
- CTRL + S இரண்டையும் ஒன்றாக இணைத்து அழுத்தவும்.

# Photoshop புதுமைகள்


சமிந்த கஹவலகே
தமிழில்: ரஞ்சன் ஜெஃப்ரி




டிஜிட்டல் புகைப்படக் கருவிகளின் ஆக்கிரமிப்பினால், அவற்றைப் பயன்படுத்தி எடுக்கப் படும் படங்களை எடிட் செய்யும் மென்பொருள்களுக்கான கேள்வியும் தேவையும் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கிறது. இவ்வாறான மென்பொருள்கள் வரிசையில் Adobe Photoshop முன்னணியில் உள்ளது.


பல்வேறுபட்ட வெளிச்சம் அல்லது ஒளி நிலைமைகளிலும் டிஜிடல் புகைப்படங்கள் எடுக்கப் படுவதனால் அவற்றை எடிட்டிங் (செவ்வை) செய்வது அவசியமாகிறது. இதற்கு Adobe Photoshop போன்ற மென் பொருள்களை நாம் உபயோகப் படுத்தலாம். விசேடமாக Photo shop மென்பொருளின் பிந்திய வெளியீடுகளில் டிஜிட்டல் புகைப்படங்களை எடிட்டிங் செய்வதற்குத் தேவையான பல்வேறு வசதிகளும் உள்ளடக்கப் பட்டுள்ளன.

டிஜிட்டல் புகைப்படக் கருவியொன்றில் எடுக்கப்பட்ட புகைப் படமொன்றினை மட்டுமன்றி Scan செய்து பெற்றுக் கொள்ளப் படும் புகைப்படங்களினையும் இந்த முறைமையினூடாக எடிட்டிங் செய்துகொள்ள முடியும்.





முதலாவதாக எடிட்டிங் செய்ய வேண்டிய புகைப்படத்தினை open செய்துகொள்ளுங்கள். பின்னர் பிரதான Menu Bar இல் காணப் படும் Image → Adjustments→ Shadow/ Highlight என்பதைத் தெரிவு செய்து கொள்ளவும். இப்பொழுது உங்களுக்குத் தென்படும் window வில் இருக்கும் கணிப்புக்களில் மாற்றங்களைச் செய்து, புகைப்படத்தின் வெளிச்ச நிலைமைகளின் அடிப்படையில் அதனை எடிட்டிங் செய்து கொள்ளலாம்.


Shadow/Highlight Photo





# Photoshop புதுமைகள்







இன்னும் துல்லியமாக எடிட்டிங் செய்யப்பட வேண்டும் என்று நீங்கள் கருதினால், show more options என்பதனைத் தெரிவு செய்து கொள்வதன்மூலம் உங்களுக்குத் தேவையான அளவுக்குத் துல்லியமாகப் படத்தினை எடிட்டிங் செய்துகொள்ளலாம்.

எடிட்டிங் செய்துகொண்டிருக்கும் புகைப்படத்தினை இன்னும் எடிட்டிங் செய்தால் நன்றாக இருக்குமென்றால், பிரதான Menu Bar இல் இருக்கும் Filter→ Sharpen →Unsharpmask எனும் தெரிவினூடாக உங்கள் இலக்கினை அடையலாம்.




சந்தையில் உள்ள டிஜிட்டல் புகைப்படக் கருவிகளின் தரத்திற்கேற்ப எடிட்டிங் செய்யப்படும் புகைப்படத்திலும் மாற்றங்களை அவதானிக்கலாம்.



Original Photo

நன்றி - PARIGANAGA


# மைக்ரோசொப்ட் எக்ஸெல்

R.R. Jeyakeshan

சென்ற இரு இதழ்களிலும் எப்படி Microsoft Excel லை திறப்பது என்பதையும் இம் மென்பொருளின் மூலம் செய்யக்கூடிய இலகுவான ஓர் பயன்பாட்டையும் உதாரணம் மூலம் செய்து காண்பித்தோம்.

இம்முறை மிக அடிப்படையான விடயங்களை அறிந்து கொண்டு மிகுதியைத் தொடர்ந்து செய்வோம்.

## Moving Around in a Worksheet




## Title Bar




Title bar ஆனது கணினியில் பயன்படுத்தப்படும் Windows Program எல்லாவற்றிலும், திறக்கப்பட்ட Program இன் திரையின் (Screen) மேல் முனையில் காணப்படும். இது பாவனையில் இருக்கும் Program இன் பெயரையும் அதனுடன் இணைத்துப் பயன்பாட்டில் இருக்கும் file இன் பெயரையும் குறிப்பிட்டுக் காட்டும்.

## Menu bar



எக்ஸெலில் நாங்கள் பயன்படுத்தவேண்டிய கட்டளைகளை (Commands) தேவைக்கு ஏற்ப தரம்பிரித்து வெவ்வேறாக வகைப் படுத்தப்பட்ட கட்டளைகளின் பட்டியலை (List) கொண்டுள்ளது. இவை ஒவ்வொன்றையும் கிளிக் செய்யும்போது எமக்கு தேவையான கட்டளைகள் கொண்ட பட்டியல் தரப்படுகிறது.

## Standard Tool Bar




இவை எமது வேலையை இலகுபடுத்துவதற்காக தரப்பட்ட ஓர் அமைப்பாகும்.

இவற்றில் நாம் அதிகம் பாவிக்கும் கட்டளைகள் (Commands) உருவப்பட பொத்தான்களாக (Image Buttons) தரப்பட்டுள்ளன. Eg: Save, Open, Print etc.

# Microsoft Excel 2000 MICROSOFT OFFICE

## Formatting Tool Bar



இதுவும் எமது வேலையை இலகுபடுத்தும் ஓர் அமைப்பாகும். இங்கு நாம் அதிகமாகப் பயன்படுத்தும் மெருகூட்டல் கட்டளைகள் உருவப்பட பொத்தான்களாக (Buttons) தரப்பட்டுள்ளன. Eg: Text Bold (B), Underline Italic etc,

## Scroll Bars

இது இரு வகைப்படும்


a) Vertical Bar

b) Horizontal Bar

Vertical bar :- இது பயன்படுத்தப்படும் worksheet ஐ மேல் கீழாக நகர்த்த உதவும்.

Horizontal Bar:- இது பயன்படுத்தப்படும் Work Sheet ஐ இடம் வலமாக நகர்த்த உதவும்.

## Cell



செல் என்பது worksheet இன் மிகச் சிறிய அடிப்படை அலகு ஆகும். இது தன்னகத்தே பெறுமதி (Value) அல்லது சமன்பாடு (Formula) அல்லது ஓர் உரு (object) லை உள்ளடக்கக் கூடியது. இந்தச் செல்கள் மிகத் தனித் தன்மையான முறையில் பெயரிடப்படுகின்றன, அல்லது பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றன. இதை Cell address என அழைக்கலாம். Eg :- C1, இங்கு "C" என்பது C எனும் Column ஐக் குறிக்கும். "1" என்பது முதலாது வரிசையைக் குறிக்கும். C1 என்பது C-Column இல் முதலாவது வரிசையில் காணப்படும் செல்லைக் குறிக்கும்.

## Column



இது மேலிருந்து கீழாக (Verti- cal) அடுக்கப்பட்டிருக்கும் செல்களின் கூட்டத்தைக் குறிக்கும். இவை A தொடக்கம் IV வரையில் பெயரிடப்படுகின்றன.


ஆகையினால் ஒவ்வொரு Work sheet ம் 256 Column களைக் கொண்டுள்ளது.

## Row



இது கிடையாக (Horizontal) வரிசைப்படுத்தப்படும் செல்களின் கூட்டத்தைக் குறிக்கும். இது 1 (ஒன்று) தொடக்கம் 65,536 வரிகள் வரை பெயரிடப்படுகிறது.

## Cell Pointer & Active Cell



Cell Pointer என்பது தற்சமயம் பாவனையில் உள்ள செல்லைப் பிரகாசப்படுத்தும் (Highlight) Active Cell என்பது பாவனையில் உள்ள செல்லைக் குறிக்கும்.

## Name Box



இது பாவனையில் உள்ள செல்லின் பெயரை வெளிப்படுத் தும் (Cell Address)

## Formula Bar

பாவனையில் உள்ள செல்லில் காணப்படும் தகவல் (Information) அல்லது பெறுமதி (Value) இப்பகுதியில் வெளிப்படுத்தப்படும். எமக்கு வேண்டியதை நேரடியாக செல்லில் தட்டச்சு செய்து கொள்ளலாம். அல்லது இந்த Formula Bar இல் தட்டச்சு செய்வதன் மூலம் Active Cell லில் உட்புகுத்திக் கொள்ளலாம்.

## Work Sheet

எக்ஸெலில் தகவல்கள் அல்லது தரவுகளைச் சேர்த்துச் சேமித்துவைக்கப் பயன்படும் பக்கம் Worksheet ஆகும். இது தன்னகத்தே Columns, Rows மற்றும் செல் என்பவற்றை உள்ளடக்கியது. இது கணக்கியல் புத்தகத்தில் உள்ள ஓர் பக்கத்திற்கு சமனானது. பல பக்கங்கள் சேர்ந்து ஓர் புத்தகமாக உருவெடுப்பது போல் பல Worksheet கள் ஒன்றிணைந்து Workbook ஆகிறது.

## Work Book

இது பல தனிப்பட்ட Work sheet களைக் கொண்ட ஓர் புத்தகமாகும். இதனைத் தனிப்பட்ட பெயரில் சேமித்து வைத்து பின்னர் வேண்டியபோது திறந்து பாவிக்கலாம்.

## Range

இது செவ்வக வடிவாக ஒன்று சேர்க்கப்பட்ட செல்களின் கூட்டங்களைக் குறிக்கும். இரண்டு குறிப்பிடத்தக்க செல்களையும் அதற்கு இடைப்பட்ட செல்களின் கூட்டத்தை குறிக்கும். Eg:- (C1: C15) என்பது C1, C15 உட்பட அதற்கு இடைப்பட்ட செல்களின் கூட்டத்தை குறிக்கும்.

மிகுதி அடுத்த இதழில்.



# Win PC Times


Win PC Times கணினி அறிவியல் கேள்விப் போட்டிக்கு நாம் எதிர்பார்த்ததைவிட பன்மடங்கு ஆதரவு வாசகர்களிடமிருந்து கிடைத்திருந்தது. வந்து குவிந்த தபாலட்டைகளுள் வெற்றியாளரைத் தேர்ந்தெடுப்பதே பெரும் பாடாகிவிட்டது. ஏராளம் பேர் சென்ற இதழ் கேள்விக்கான சரியான விடையை எழுதி அனுப்பியிருந்தார்கள். வாசகர்கள் அனைவரதும் இந்த ஆர்வத்துக்கும், கணினி அறிவியல் மீதான பற்றுக்கும் எமது நன்றிகளும், வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

சென்ற இதழ் கேள்விக்கான சரியான விடையான "Cluster" என்பதை எழுதி அனுப்பியிருந்த ஏராளமான வாசகர்களிலிருந்து 10 பேர் வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களின் விபரம் வருமாறு,

தனபால் ஜீன், கல்லாறு
எம்.எஸ்.எம்.றிஸ்மி, காலி
கே.பிரகாஷினி, திருகோணமல
யு.சி.றிஹால்டீன், அனுராதபுரம்
கே.நிருபன், தம்பிலுவில்
எம்.கொஹுனா, மஸ்கெலியா
எம்.ஆர்.எம்.வசீம், மாத்தளை
ஈ.நிரஞ்சன், மன்னார்
வை.ஷிபா, ஏறாவூர்
ரி.செல்வராஜ், டிக்கோயா

வெற்றிபெற்றவர்கள், சரியான பதிலை எழுதியனுப்பியவர்கள், போட்டியில் கலந்துகொண்டு தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியவர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள். வெற்றி பெற்றவர்களுக்கான மூன்று மாதங்களுக்குரிய PC Times சஞ்சிகைகள் செப்டம்பர் மாதம் முதல் அனுப்பிவைக்கப்படும்.

இனி, இந்த இதழுக்கான Win PC Times கணினி அறிவியல் கேள்விக்குச் செல்வோம்.



**Wikipedia இணைய கலைக் களஞ்சியத்தைப் பராமரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மென்பொருளின் பெயர் என்ன?**

இந்தக் கேள்விக்கான சரியான பதிலை தபால் அட்டை ஒன்றில் எழுதி, ஜுலை 20ஆம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக எமக்கு அனுப்பி வையுங்கள். சரியான பதிலை எழுதியனுப்புபவர்களுள் தெரிவுசெய்யப்படும் 10 பேருக்கு 3 மாதங்களுக்குரிய PC Times சஞ்சிகை இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

பதில் எழுதி அனுப்பவேண்டிய முகவரி:

**Win PC Times**
**No.8, Hunupitiya CrossRoad,**
**Colombo-02**

குறிப்பு: உங்கள் பெயர் மற்றும் தபால் முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

TO SUBMIT




# வாசகர் திருமுகம்

இவ் PC Times சஞ்சிகையை நான் வாங்கிக் கொண்டுபோய் பல மாணவ, மாணவியருக்கு காட்டினேன். இவ்வாறு ஒரு தமிழ் சஞ்சிகை வெளிவருகிறதா என்று ஓர் ஆசிரியர் ஆச்சரியப்பட்டார். எனவே எல்லா கிராமங்களுக்கும் PC Times கிடைக்க நடவடிக்கை எடுப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

க. சுகந்தன்
அம்பன்

தங்கள் PC Times சஞ்சிகையின் முதல் 3 பிரதிகளும் மிகவும் அற்புதமாகவும், கண்ணைக் கவரும் பல படங்களும் உள்ளன. இந்த "PC Times" என்ற சஞ்சிகை இடைவிடாது வெளிவரவேண்டும் என்றும், இச்சஞ்சிகையில் பணிபுரியும் அனைவருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

எஸ். நிரோசன்
பதுளை.

'PC Times' வந்த பிறகு எனது கணினிப் பாட வேலைகளை எல்லாம் இலகுவாகச் செய்துகொள்ள முடிகிறது. மிக்க மகிழ்ச்சி.

M.S.M. Ifaz Ahamed.

# Computer Price Index

| MONITORS | ViewSonic | Philips | Mercury | LG |
|---|---|---|---|---|
| Normal 15" | Rs.9,000 - 10,000 | Rs.9,750-10,000 | Rs.9,750-10,000 | Rs.10,750-11,500 |
| Normal 17" | Rs.13,500-15,000 | Rs.13,000-14,000 | Rs.13,000-15,000 | Rs.14,500-16,500 |
| LCD 15" | Rs.37,550-40,250 | Rs.25,000-30,000 | Rs.22,000-24,000 | |
| LCD 17" | Rs.40,000-50,000 | Rs.40,500-50,000 | Rs.32,000-34,000 | |

| MOUSE PAD |
|---|
| Rs.50.00 |

| RAM DDR | 128MB | 256 MB | 128MB Kingston | 256MB Kingston |
|---|---|---|---|---|
| | Rs.1,900-3,250 | Rs.2,900-4,000 | Rs.1,750-2,250 | Rs.2,600-3,500 |

| HARD DISK (Maxtor) | 40GB(7200rpm) | 80GB(7200rpm) | 120 GB | 200GB(7200rpm) |
|---|---|---|---|---|
| | Rs.5,500-6,000 | Rs.6,000-6,500 | Rs.8,000-9,000 | Rs.12000 -13,000 |

| SOUND CARD | Eagle | Vibra 128 bit | Creative 5.1 live | Creative Audily |
|---|---|---|---|---|
| | Rs.950-1,800 | Rs.750-2,000 | Rs.3,500-4,000 | Rs.13,500-14,500 |

| UPS | PowerTree | Prolink 600VA | PowerTree1.2KVA | Mercury |
|---|---|---|---|---|
| | Rs.3,500-4,000 | Rs.4,000-4,500 | Rs.7,250-8,000 | Rs.3,500-8,000 |

| PRINTER | Canon (5200) | Epson (4300) | HP (3535) | LX 300+ |
|---|---|---|---|---|
| | Rs.4,500-5,750 | Rs.5,000-6,250 | Rs.5,600 | Rs.17,000-18,000 |

| SCANNERS | HP3500 | HP2400 | Mercury |
|---|---|---|---|
| | Rs.14,000-15,000 | Rs.8,750-10,000 | Rs.5,000-5,100 |

| DUST COVER |
|---|
| Rs.250- 350 |

| SPEAKER | Creative | Genius | OEM | Subwoofer Creative |
|---|---|---|---|---|
| | Rs.1,000-1,250 | Rs.1,250-1,500 | Rs.700-1,000 | Rs.3,000-3,500 |

| CD DRIVE (52x) | Mercury | Gigabyte | Samsung | Sony |
|---|---|---|---|---|
| | Rs.1,700-1,900 | Rs.1,800-2,500 | Rs.1,900-2,500 | Rs.1,900-3,000 |

| DVD DRIVE (16x) | Mercury | Gigabyte | Samsung | Sony |
|---|---|---|---|---|
| | Rs.3,750-4,250 | Rs.3,500-4,000 | Rs.3,750-4,000 | Rs.3,600-4,000 |

| CD WRITERS | Samsung | Mercury | Sony | Gigabyte |
|---|---|---|---|---|
| | Rs.3,600-3,750 | Rs.3,500-4,250 | Rs.3,600-4,000 | Rs.3,900-4,500 |

| DVD WRITERS | Mercury | Benn | Sony | Gigabyte |
|---|---|---|---|---|
| | Rs.7,000-7,500 | Rs.10,000-12,000 | Rs.8,000-10,000 | Rs.9,000-10,000 |

| FAX MODEM(EXT) | A2tec USB | A2tex Serial |
|---|---|---|
| | Rs.2,500-3,000 | Rs.2,000-4,000 |

| CASING | P IV | Mercury |
|---|---|---|
| | Rs.2,350-4,500 | Rs.2,850-3,500 |

| HEAD PHONE | Labtec | Benius |
|---|---|---|
| | Rs.650-1,000 | Rs.750-1,000 |

| MICROPHONE | Benius | With H.Phone |
|---|---|---|
| | Rs.350-500 | Rs.500-1,500 |

| ZIP DISKETT | 100 MB | 250 MB |
|---|---|---|
| | Rs.800-900 | Rs.1,100-1,300 |

| CAPTURE | Asus | Snazzi USB |
|---|---|---|
| | Rs.7,000-8,000 | Rs.38,000-40,000 |

| FLASH DRIVE | Kingston 256 MB | Kingston 512MB | Kingston 01GB | Kingston 02 GB |
|---|---|---|---|---|
| | Rs.2,000-2,750 | Rs.3,000-3,750 | Rs.5,000-5,750 | Rs.9,000-10,000 |

| SCREEN FILTERS | OEM 15" | OEM 17" | 3M 15" | 3M 17" |
|---|---|---|---|---|
| | Rs.250-300 | Rs.18,500-19,000 | Rs.3,750-4,250 | Rs.7,000-8,000 |

| MOTHER BOARD | PIV (Intel) | AMD G.B | AMD |
|---|---|---|---|
| | Rs.5,000-9,000 | Rs.5,000-8,000 | Rs.5,000-9,000 |

| FLOPPY DISKETT | Imation (1box) | Sony (1box) | Philiphs |
|---|---|---|---|
| | Rs.300-350 | Rs.250-300 | Rs.250-300 |

| FLOPPY DRIVE | Sony | Mercury | Panasonic |
|---|---|---|---|
| | Rs.900-1,000 | Rs.850-1,000 | Rs.800-1,000 |

| COOLING FAN | AMD | P III | P IV |
|---|---|---|---|
| | Rs.500-700 | Rs.650-750 | Rs.750-9,000 |

| PROCESSOR | 2.2GHz(Intel) | 2.8GHz(Intel) | AMD |
|---|---|---|---|
| | Rs.13,000-15,000 | Rs.18,000-20,000 | Rs.[illegible]-7,500 |

| TV+RADIO CARD | PixelView | PGRX | Mercury |
|---|---|---|---|
| | Rs.3,750-4,500 | Rs.3,750-4,000 | Rs.3,750-4,250 |

| INTERNET MODEM(EXT) | D-Link | A2tec (56k) | Prolink |
|---|---|---|---|
| | Rs.3,500 -4,250 | Rs.3,000-3,500 | Rs.4,500-5,000 |

| DIGITAL CAMERA | Mercury | Creative | Sony |
|---|---|---|---|
| | Rs.13,000-20,000 | Rs.25,500-30,000 | Rs.52,000-56,000 |

| BLANK CD | 06M | Imation | TDK with casing |
|---|---|---|---|
| | Rs.23.00-26.00 | Rs.30.00-35.00 | Rs.30.00-35.00 |

| KEY BOARD | Mercury | Multimedia | USB |
|---|---|---|---|
| | Rs.400 -4,000 | Rs.1,100-1,750 | Rs.650-1,000 |

| MOUSE | PS2 Normal | Mercury | Optical USB |
|---|---|---|---|
| | Rs. 250 - 350 | Rs.250-1,500 | Rs.1,100-1,500 |

| INTERNET MODEM (INTERNAL) | D-Link (56k) | A2tec (56k) | Conexant (56k) |
|---|---|---|---|
| | Rs.1,000-1,500 | Rs.700-1,000 | Rs.1,000-1,250 |

| POWER SUPPLY | Mercury | P IV (300W) |
|---|---|---|
| | Rs.1,200-1,500 | Rs.1,250-1,900 |

| WEB CAMARA | Creative |
|---|---|
| | Rs.3,500-5,000 |

| EXT.FLOPPY DRIVE | Imation | Mitsumi |
|---|---|---|
| | Rs.4,500-5,000 | Rs.6,500-7,000 |

| ZIP DRIVE (INTERNAL) | IOMega (100MB) | IOMega(250MB) |
|---|---|---|
| | Rs.6,000-7,000 | Rs.9,750-15,000 |

| EXT. CD DRIVE | Asus | CD Bay |
|---|---|---|
| | Rs.8,000-9,000 | Rs.12,500-13,500 |

| FAX MODEM | Mercury | A2tec |
|---|---|---|
| | Rs.1,300-3,500 | Rs.800-1,200 |

| VGA Card | Mercury | Fine (64 MB) |
|---|---|---|
| | Rs.,4,500-7,500 | Rs.4,000-4,800 |

*Prepared by Pradeep Jayakody*

**கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்**


**SPEED IT NET இயக்குநர்**

**த.தவரூபன்**

கேள்வி : இரண்டு வருட பாவனையின் பின்னர், எனது கணினியின் CIMOS Battery செயலிழந்து போனது. அதற்கு புதியதொரு Battery போட்ட பின்னும் **CIMOS BATTERY FAILED** எனும் தரவானது கணினியின் தொடக்க நிலையில் காட்டப்படுகிறது. இதற்கான காரணம் என்ன? இதை எவ்வாறு தடுக்கலாம்?

**Praveen, Batticaloa.**

பதில்: பற்றரி செயலிழந்ததாக இருக்கவேண்டும். அல்லது அது




பொருத்தப்படும் பகுதி செயலிழந் திருக்கவேண்டும். அழுக்குப் படிந் திருக்கவும் வாய்ப்புண்டு. ஒரு முறை நன்றாகத் துடைத்துவிட்டுப் போட்டுப் பார்க்கவும்.


கேள்வி : என்னிடம் ஒரு Gmail Account உள்ளது. எனக்குப் பலரிடமிருந்து Mail கள் வரு கின்றன. Gmail இல் Yahoo வைப் போன்று அவர்களின் Mail களை Inbox இல் விழாமல் அவர்களின் பெயரிலேயே Folderகளை உரு வாக்கி அதில் அவர்களின் Mail களை வந்து விழுமாறு செய்ய லாமா? அப்படியென்றால் அது எப்படி?

எம்.எச்.எம்.ஹம்தான், புத்தளம்

பதில்: Gmailலில் Folder களை உருவாக்கி Inbox க்கு வரும் மெயில்களை அதனுள் நீங்கள் தான் போட்டுவிடலாமே தவிர தானாகவே அதில் விழவைக்க முடியாது.



கேள்வி : Hibernate பயன்பாடு பற்றி முன்னைய இதழில் குறிப் பிட்டிருந்தீர்கள். அதில் Ram இல் இருந்து Hard Disk ற்கு Copy ஆகும் Data மீண்டும் கணினி விழிக்கும்போது அழிக்கப்பட்டு விடுமா? அவ்வாறு Hard disk இல் அழிக்கப்படாவிடின் Hard disk




இல் space குறைந்து போய் விடுமே?


முரளீதரன், பாண்டிருப்பு, கல்முனை


பதில்: கணினி ஆரம்பிக்கும் போது வழக்கம்போல சகல தகவல் களும் Ram இற்கு மாற்றப்பட்டு விடும். எனவே மேற்குறித்த பிரச்சினை இருக்காது.

கேள்வி : Windows XP இயங் கத் தொடங்கும்போது ஒரு music file default ஆக ஒலிக்கும். அதை எமது விருப்பத்திற்கேற்ப எப்படி மாற்றுவது?

வீ.கரன், மட்டக்களப்பு

பதில்: கணினியின் Control Panel உள்ளே சென்று அங்கு Sounds And Audio Devices என் பதை இரட்டைக் கிளிக் செய்து திறப்பீர்களாயின் ஒரு சாளரம் தோன்றும். அதிலே Sounds என்ற பகுதியில் Program Events என்ற பெட்டிக்குள் Stand Windows என்பதை தெரிவுசெய்தால் பக்கத் தில் Browse பட்டன் தோன்றும். அதன்மூலமாக நீங்கள் விரும்பிய ஒலியையோ பாட்டையோ தெரிவு செய்து ஓகே செய்தால் மாற்றி விடலாம்






களுக்கும் பொருந்துமா என்பதை Motherboard தான் தீர்மானிக்கும். அநேகம் பொருந்தும். எனினும் இந்த Ram களில் SD மற்றும் DDR என இரண்டு வகைகள் இருக்கின்றன. DDR பொருத்தக்கூடியதில் SD ஐயோ SD பொருத்தக் கூடியதில் DDR ஐயோ பொருத்த முடியாது.

**கேள்வி : கணினிகளைத் தாக்கும் வைரஸ்கள் ஏன் CD மூலமாக CD Player களை தாக்குவதில்லை? .ஒரு CD யிலுள்ள வைரசை Anti Virus Software மூலம் அழிக்கலாமா?**

**பதில்:** CD Player கள் கணினி போல் Software கள் கொண்டு




**கேள்வி : எனது PIII கணினி யின் திரைப்புலக்காட்சி (Monitor) இல் மிளிரும் பச்சை Light திடீரென மஞ்சள் Light ஆக மாறுகின்றது. திரைப்புலக்காட்சிக்கு எந்த message உம் வராதாம். இதற்கு என்ன காரணம்?. PIII கணினியின் 128MB Ram Size சகல வகையான PIII கணினிகளுக்கும் பொருந்துமா?**

*க.சுகந்தன்,*
*முகாமைத்துவ பீடம்,*
*யாழ் பல்கலைக்கழகம்*

**பதில்:** உங்கள் வினாவை நான் ஊகிக்க வேண்டியிருக்கின்றது. நீங்கள் கணினித் திரையின் ஆளிக்குப் பக்கத்தில் இருக்கும் சிறு ஒளிக் குமிழ் பற்றிக் கேட்கிறீர்கள். ஆயினும் தற்காலிகமாக மாறுகிறதா அல்லது நிரந்தரமாகவே மாறிவிடுகிறதா என்பதைக் குறிப்பிடவில்லை. நிரந்தரமானதாயின் கணினியின் திரைக்கு VGA கார்ட்டினூடாக சமிக்ஞைகள் வரவில்லை என்று பொருள். அப்படியாயின் திரையினை கணினியுடன் இணைக்கும் கேபிள் சரியாக இணைக்கப்பட்டிருக்கிறதா என பார்க்கவேண்டும். அப்படியும் சரிவராதுவிடில் VGA கார்ட்டை பரிசோதிக்கவேண்டும். அது நழுவியிருக்கலாம். அல்லது பழுதாயிருக்கலாம்.

அதைவிடுத்து தற்காலிகமான மாற்றம் எனில் நீண்டநேரம் கணினி பாவிக்காது இருந்தால் தானாகவே கணினி திரை நிறுத்தப்படும். பின்னர் மவுசை அல்லது விசைப்பலகையினை அசைத்தால் சரிவரும். இவ்வாறு தானாகவே திரை ஓய்வுக்கு வருவதை கணினியின் Control Panel இன் உள்ளிருக்கும் Power Options எனும் பகுதியில் சென்று மாற்றிக்கொள்ளலாம்

PIII கணினியின் 128MB Ram Size சகல வகையான PIII கணினிகளுக்கும் பொருந்துமா என்பதை Motherboard தான் தீர்மானிக்கும். அநேகம் பொருந்தும். எனினும் இந்த Ram களில் SD மற்றும் DDR என இரண்டு வகைகள் இருக்கின்றன. DDR பொருத்தக்கூடியதில் SD ஐயோ SD பொருத்தக் கூடியதில் DDR ஐயோ பொருத்த முடியாது.

**பதில்:** CD Player கள் கணினி போல் Software கள் கொண்டு இயக்கப்படுவதில்லையே. அத்துடன் அதில் பாடலைக் கேட்க மட்டுமே முடிகிறது. வெளியில் இருந்து உட்புகுத்தமுடியாது. CD யிலுள்ள வைரசை Anti Virus Software மூலம் அழிக்க முடியாது. இருப்பதை வாசிக்கமுடியுமே தவிர மாற்றம் செய்யமுடியாது. CDயில் இருந்து கணினிக்கு வைரஸ் உட்புகவிடாமல் Anti Virus Software பாதுகாக்கும்.

**கேள்வி : Picture Package எதற்கு பயன்படுத்தப்படுகிறது?. விபரம் தரவும்.**

*கௌசல்யா, யாழ்ப்பாணம்*

**பதில்:** உங்கள் வினா தெளிவில்லை. நீங்கள் Photoshop மென்பொருளில் பாவிக்கப்படும் Picture Package பற்றி கேட்கிறீர்கள் எனக் கருதுகிறேன். இது சிறிது விளக்கமாக எழுதவேண்டும். அடுத்த இதழில் தர முயல்கிறோம்:




# தமிழில் இனிய இணையத்தளங்கள்

தமிழில் நல்ல இணையத்தளங்கள் ஏராளமாக இப்போது இணைய வலைப்பின்னலில் உலாவருகின்றன. தமிழ்கூறு நல்லுலகின் மத்தியில் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியைப் பறைசாற்றுவனவாக இந்த இணையத்தளங்கள் காணப் படுகின்றன. இவற்றுள் சில இணையத்தளங்களை அவ்வப்போது நாம் இங்கு அறிமுகப்படுத்தி வருகிறோம். இம்முறையும் இவ்வாறான இரண்டு தமிழ் இணையத்தளங்கள் பற்றிப் பார்ப்போம்.

## கூடல் டொட் கொம் (www.koodal.com)

செய்திகள், திரைப்படங்கள், நகைச்சுவை, கூடல் மெயில் என்ற தனித்துவமான மின்னஞ்சல் பகுதி



என ஏராளமான விடயதானங் களுடன் இந்த இணையத்தளம் காணப்படுகிறது. செய்திகள் பகுதி தமிழ்நாட்டுச் செய்திகள், உலகச் செய்திகள் என இரண்டா கப் பிரிக்கப்பட்டுள்ளது. உலகச் செய்திகள் பகுதியில் இலங்கைச் செய்திகள் நிறையவே இடம் பிடித்துள்ளன.

வழமையான பல தமிழ் இணையத்தளங்கள் போலவே சினிமா இதிலும் அதிக முக்கியத் துவம் பெறுகிறது. தமிழ் சினிமா தொடர்பான பல செய்திகள், தகவல்கள் இந்தத் தளத்தில் இடம் பெற்றுள்ளன.

இவை தவிர, கட் டுரைகள், கவிதை, பெண்கள், இளமை, உங்கள் நலம், வரலாறு படைத்தோர், ஆய்வுச் சிந்தனைகள் பல பல் வேறு தலைப்புக்களில் ஏராளமான சுவாரஸ்ய மான விடயங்கள் கூட லில் இடம்பெறு கின் றன. ஒருமுறை பார்த் துத் தான் விடுங்க ளேன்.

## புதுமை டொட் கொம் (www.puthumai.com)


இதுவும் தமிழில் பல பொழுது போக்கு அம்சங்களைக் கொண்ட ஒரு இணையத்தளமாகும்.





இன்னதுதான் என்றில்லாமல், ஆர்வத்தைத் தூண்டக்கூடிய பல விடயங்களையும் இந்தத் தளம் கொண்டிருக்கிறது.

இதன் பிரதான பக்கத்தில் (Home Page) ஆர்வத்தைத் தூண் டக்கூடிய பல்வேறு செய்திகள், தகவல்கள், கட்டுரைகள் காணப் படுகின்றன. கால்பந்தாட்டம் தொடர்பான செய்திகள், புதுப் பேட்டை தமிழ் திரைப்பட விமர் சனம், "வாய்ப்புக்கள் தானாகத் தேடி வராது" என்ற தலைப்பி லான உற்சாகக் கட்டுரை, சினிமா கிசு கிசு என சுவாரஸ்யமான பல விடயங்கள் பிரதான பக்கத்தில் இடம்பெறுகின்றன.

இது தவிர, செய்திகள், கேள்வி-பதில், படங்கள், சிறுகதைகள், கவிதைகள், ஜோக்ஸ், அரசியல், சினிமா, மருத்துவம், ஆன்மீகம் என பல்வேறு துறைகள் சார்ந்த விடயங்களும் இந்தத் தளத்தில் இடம்பெறுகி ன்றன.




தகவல்: **Diana George, Modera**

## நீங்களும் பகிரலாம்

சுவாரஸ்யமான, பயனுள்ள பல இணையத்தளங்கள் எண்ணிக்கைக் கணக்கற்று இப்போது இணைய வலைப் பின்னலில் உலாவரு கின்றன.


இவ்வாறான பல தளங்கள் பற்றி நீங்களும் அறிந்திருக்கலாம். அவை பற்றிய தகவல்களை வாசகர்களுடன் நீங்கள் பகிர்ந்து கொள்ளலாம். எழுதியனுப்புங்கள்



**Web Introduction**
**PC Times,**
**Wijeya Newspapers Ltd.**
**8, Hunupitiya Cross Road,**
**Colombo 2**

இங்க பார்! Internet இல் மனிதர் செய்யீர வேலையை! எங்களை பார்த்து குரங்குச் சேட்டை என்பார்கள்.








இக்கரைக்கு அக்கரை பச்சை




# ஜோக்ஸ்




எனக்குத் தெரிந்ததை
நான் செய்யவேண்டாமா?



எலிகள் (mouse) எல்லாம்
கணினிகளுடன்
கட்டப்பட்டுவிட்டதால்...
பூனைகளெல்லாம்
இப்படித்தான் காலம்
போக்குகின்றனவோ.....




மகன் மன்னிச்சு கொள்ளடா....
நான் Hotmail ஐ
Open பண்ணிப்போட்டன்.



# Wireless தொழில்நுட்பம்


- கம்ப்யூடர்ஜி

நீங்கள் நகரின் மத்தியில் மடிக்கணினியுடன் நின்றுகொண்டிருக்கின்றீர்கள். அல்லது உங்கள் வீட்டுத் தோட்டத்தில் நின்றுகொண்டிருக்கின்றீர்கள். இந்தச் சமயத்தில் இணையத்தில் இணைய விரும்புகிறீர்கள் (Internet). இதற்கு என்ன செய்யலாம்? இதற்கு உங்களுக்கு ஏதேனும் தீர்வு உண்டா?

ஆம், நிச்சயமாக இதற்குத் தீர்வு உண்டு. கம்பியில்லா வலைப்பின்னல் தொழில்நுட்பம் இதற்கான தீர்வை வழங்குகின்றது.


வீட்டுக்கொரு கணினியே அடைவதில் கடினப்பாடாக இருக்கின்றது. சாதாரணமாக தொலைபேசி இணைப்பு எடுப்பதோ / ADSL எடுப்பதோ பல இடங்களில் குதிரைக் கொம்பாக இருக்கின்றபோது, இவன் வந்து கம்பியில்லா வலைப்பின்னல் தொழில்நுட்பம் பற்றி கதைக்கிறானே என்று நீங்கள் முணுமுணுப்பதை உணரக்கூடியதாக உள்ளது. எனினும், இன்றைய உலகில் நவீன தொலைத்தொடர்பு வசதிகள் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கின்றன என்பதை நாம் அறிந்து கொள்ளவாவது வேண்டாமா?.

எம்மிடம் மடிக்கணினிப் பயன்பாடு ஒப்பீட்டளவில் குறைவாயிருக்கலாம். இணையப் பாவனையும் பல இடங்களில் குறைவாக இருக்கலாம். ஆனாலும், இலங்கையில் பல முக்கிய நகரங்களிலும், கிராமங்களிலும் கூட இப்போது தொலைபேசி இணைப்புக்களும்,




CDMA இணைப்புக்களும் சாத்தியமாகிவிட்ட நிலையில், இந்தத் தொழில்நுட்பம் நமது நாடுமுழுவதும் பரவ வெகுநாள் எடுக்கும் என்று சொல்லி விட முடியாது. எனவே இவை பற்றித் தெரிந்திருக்க வேண்டியது அவசியம் தானே?.

கேபிள்கள் இன்றியும் எம்மால் புதிய உலகத்தைப் பார்க்க முடியும். இணையத்தில் இணைந்து தொலைத்தொடர்புகளை மேற்கொள்ள முடியும். உள்ளக வலைப்பின்னல்களை மேற்கொள்ள முடியும். ஒலிபரப்புக்களை உலகெங்கும் செய்ய முடியும். இந்தக் கம்பியில்லா தொழில்நுட்பம் உங்கள் வீட்டை, அறையை வெளி




உலகுக்குக் கொண்டு வரும். நான் அர்த்தமில்லாமல் உற்பத்தியாளர்களால் 2020ம் ஆண்டுவரையில் உற்பத்தி செய்துவிட முடியாத தொழில்நுட்ப சாதனங்கள் பற்றிக் கூறவில்லை. உங்களுக்குத் தற்போது கிடைக்கக்கூடிய தொழில்நுட்பம் பற்றித்தான் சொல்கின்றேன். அதுவும் இன்றுள்ளவற்றில் மிகவும் பெறுமதியானதும், விரைவானதும், கூடுதல் இசைவாக்கம் கொண்டதும், ஓரளவுக்கேனும் விலை குறைந்ததுமான தொழில்நுட்பம் தான் அவசியமாகின்றது.


இணையம் இன்று அறியப்பட்ட மிகப்பெரிய உலகளாவிய வலைப்பின்னல். இது பலதரப்பட்ட காரணங்களினால் பிரபல்யமாக இருக்கின்றது. ஒரு குறிப்பிட்டளவு கணினிகளை இணைப்பதன் மூலம் நீங்கள் CD ROM, Printers போன்ற வன்பொருள் சாதனங்களை பகிர்ந்துகொள்ள முடிகின்றது. கணினிகளுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்தவும், கோப்புக்களை பரிமாறிக் கொள்ளவும், பலர் விளையாடக்கூடிய Gameகளை விளையாடவும் முடிகின்றது. மேலும் பெறுமதியான வளங்களை எல்லாம் பரிமாறிக் கொள்ள முடிகின்றது. ஏன் ஒரு ADSL இணைப்பைக்கூட பல கணினிகளுக்கிடையில் பரிமாறிக் கொள்ள முடிகின்றது. இவையெல்லாம் வலைப்பின்னல் ஒன்றினூடாகத்தான் சாத்தியப்படுகின்றது.

## மாறுவதற்கு நேரம்

புராதன/பாரம்பரிய வலைப் பின்னல்களில் உள்ள முக்கியமான பிரச்சினை இந்த கேபிள்கள்தான். நீங்கள் ஒரு அழகான சிறந்த அமைப்புடன் அலுவலகம் ஒன்றை கேபிள்கள் உதவியின்றி வலைப் பின்னல் ஏற்படுத்தி அமைப்பீர்களானால் எவ்வளவு நன்றாயிருக்கும். ஒரு அலுவலகத்தைப் பொருத்தவரையில் என்றாலும் பரவாயில்லை. உங்கள் வீட்டில் மேற்குறித்த கேபிள் மூலமான வலைப்பின்னலை அமைப்பது நிச்சயம் இடைஞ்சல் தரக்கூடியதாகவே இருக்கும். அதுவும் உங்கள் கணினிகளை ஒரு அறையிலிருந்து இன்னும் ஒரு அறைக்குக் கொண்டு செல்லவேண்டும் என்றால் கேபிள் வலைப்பின்னல் எந்தளவு சௌகரியமானதாயிருக்கக்கூடும்? இப்படியான சந்தர்ப்பங்களில் கம்பியில்லா தொழில்நுட்பமே ஒரு அற்புதமான தீர்வாக இருக்கும்.

நீங்கள் கம்பியில்லா வலைப் பின்னலுக்கு பயன்படுத்தும்/ தெரிவுசெய்யும் வன்பொருள் சாதனங்களைப் பொறுத்து அதனுடைய வேகம் 11Mbps, *300-500* அடி வீச்சத்துள் காணப்படலாம். இலங்கையில் தற்போது இந்த வகை வலைப்பின்னல் தொழில் நுட்ப சேவை வழங்குநர்கள் பலர் உள்ளார்கள். இதைவிட அதிகமான வசதிகொண்ட கம்பியில்லா வலைப்பின்னல் தொடர்புகளும் இப்போது அறிமுகப்படுத்தப் பட்டுவிட்டன.

ஒரு கம்பியில்லா வலைப் பின்னல் கார்ட் (Wrireless Net work card) ஒன்றை உங்கள் கணினியில் பொருத்தியிருப்பின் வீட்டிலோ, அலுவலகத்திலோ குறித்த வழங்குனர்களினால் வழங்கப்பட்டிருக்கும் வாங்கி (Reciever/Gateway) சாதனத்தின் ஊடாக நீங்கள் இணையத்தில் இணைந்துகொள்ளமுடியும்.





மேலும் உள்ளக வலைப் பின்னலகளையும் இத்தொழில்நுட்பத்தில் இணைத்துவிட்டால் கம்பிகள் எதுவும் இல்லாமல் உங்கள் கணினிகள் இணைய உலகத்துடன் இணைக்கப்பட்டு விடும். பிறகு என்ன? இப்போது நீங்கள் எங்கிருந்தபோதும், உலக வலைப்பின்னல் இணைப்புக் கொண்டவராக திகழ்வீர்கள்.


இந்த வலைப்பின்னலை கணினியில் நிறுவ நீங்கள் ஒரு கணினிப் பட்டதாரியாக இருக்கவேண்டும் என்ற அவசியமே இல்லை. சில நிமிட நேரத்தில் எல்லாம் சாத்தியமாகிவிடும். Receiver ஒன்றை வழங்குநர்களிடமிருந்து பெற்றுக் கொள்வது தான் வேலை. மற்றதெல்லாம் கழற்றிப் பூட்டும் வேலை மட்டும்தான். எது எப்படியோ இலங்கையைப் பொருத்த வரையில் இந்த தொழில்நுட்பம் கொஞ்சம் விலை அதிகம்தான். ஆயினும், ADSL கிடைக்கும் என்று தவம் கிடப்பதைவிட இது எவ்வளவோ மேல் என்று தயக்கமின்றிக் கூறலாம்.

## உங்களுக்கு என்ன அவசியம்

உங்களுக்கு ஒரு கம்பியில்லா வலைப்பின்னலை இரு கணினிகளுக் கிடையில் ஏற்படுத்த அவசியமானது வெறுமனே இரண்டு Wireless Network Card கள் மாத்திரமே. பிறகு ஒரு சின்ன நிறுவுதல் பணி. சாதாரண Peer-to-Peer வலைப்பின்னல் போன்றதே இது. ஆனால், இந்தத் தொழில் நுட்பம் மிகவும் பெறுமதியானதும் விரைவானதும் கூட. வழங்குநர்களின் Base station, Gate way இருந்தால் வேறு ஒன்றும் வேலையில்லை. நினைத்த மாத்திரத்தில் உங்கள் வலைப்பின்னலை ஏற்படுத்திக்கொண்டுவிடலாம்.




இங்கு சிந்திக்கவேண்டிய ஒரு விடயம், எமக்கு என்ன தேவை என்பதே. மூன்று பிரதான கம்பியில்லா தொழில்நுட்ப வகைகள் காணப்படுகின்றன. இவை மூன்றும் தமது தொடர்புகளுக்கு வானொலி அலைகளையே பயன்படுத்துகின்றன என்றபோதிலும் மூன்று வேறுவேறு வகையான விடயங்களாக அவை வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.




Home RF Network

Home RF ஆனது வீட்டு வலைப்பின்னலுக்காகவும், 802. 11b அல்லது Wifi ஆனது பெரியளவிலான வலைப்பின்னலுக்






காகவும், Bluetooth ஆனது Phone, PDA மற்றும் குறைந்த Bandwith சாதனங்கள் தமக்கிடையிலும் கணினிகளுடனும் தொடர்பு கொள்வதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. வித்தியாசம் வித்தியாசமான தொழில்நுட்பங்கள் வித்தியாசமான வேகங்களினை வழங்குகின்றன. Home RF ஆனது அதிகூடிய தாக 2Mbps உம் Wifi ஆனது 11Mbps உம் Bluetooth 1 Mbps உம் வேகம் கொண்டது.



Bluetooth

Home RF இனது வேகம் 10 Mbps இற்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. Wifi இனது வேகம் 22 Mbps இற்கு தற்போது முன்னேற்றம் கண்டிருக்கின்றது. விரைவில் இது 54 Mbps ஆகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. HomeRF உம் Wi-fi உம் 400 அடிக்குள்ளான இடைத்தூரத்திற்குள்ளும் Bluetooth 30 அடித்தூரத்திற்குள்ளும் இயங்க வல்லமையாயிருக்கின்றன.

தரத்திற்கெதிரான போட்டியில் HomeRF இனைவிட Wi-fi தான் முன்னிலையில் இருக்கின்றது. எனினும், விலையில் மலிவாக HomeRF திகழ்கின்றது. வேகத்திலும் Wi-fi தான் முதலிடம். Bluetoothஐப் பொறுத்தவரை இது வித்தியாசமானது. இது சிறுவகை சாதனங்களுக்கிடையிலான தொடர்புகளுக்கு (உதாரணமாக, PDA, Note-book, Phones) தான் ஏற்றது. இது Wi-fi தொழில்நுட்பத்துடன் வழங்கக் கூடிய இலவச தொழில்நுட்பமாகவே (Complimentary) கருதப்படலாம்.

Wi-fi இல் உள்ள மற்றொரு விசேடம் என்னவென்றால் இது மாற்றத்துடன் இசைந்து கொடுக்கக்கூடியதும் நீடிக்கப்படக்கூடியதும் (Scalable) ஆகும். ஒரு Wi-fi தொகுதியை வீட்டில் சில கணினிக்கிடையிலான வலைப்பின்னலுக்கு பயன்படுத்தும் அதே வேளை அதனை ஒரு அலுவலகத்தில் உள்ள 10இற்கும் மேற்பட்ட கணினிகளுக்கிடையிலான வலைப்பின்னல் அமைப்புக்கும் பயன்படுத்த முடியும். இணைய சேவை நிலையங்கள் (Cyber-cafes) மிக விரைவில் கம்பியில்லாத இணையப் பாவனை முறையினை அறிமுகப்படுத்தக் கூடிய சாத்தியப்பாடுகள் நிறையவே இருக்கின்றன.

# Internet Tips ..... Tips....

நீங்கள் ஓர் மின்னஞ்சல் முகவரிக்கு சொந்தக்காரராக இருந்தால் அன்றாடம் அதனை பாவிக்கும்போது உங்களுக்கு வந்து சேரும் மின்னஞ்சல்களை வாசித்த பின் தேவையற்றவைகளை அகற்ற அல்லது அழித்து விட வேண்டிய தேவை கட்டாயம் உங்களுக்கு ஏற்படும். அல்லா விட்டால் மின்னஞ்சல் கோவைகள் (Files) ஒன்று சேர்த்து இடவசதியின்மையை ஏற்படுத்தும்.


அவற்றை நாங்கள் Delete எனும் கட்டளையை கொடுத்து இலகுவில் அழித்து விடலாம். ஆனால் அவை இலகுவில் முற்றாக அழிந்து விடுவதில்லை. அவை "Delete" ஐ கொடுத்து அழித்த பின்னர் "Deleted Folder" எனும் Folder இனுள் சேர்க்கப்படும்.

ஒவ்வோர் மின்னஞ்சல் மென்பொருளுடனும் Deleted Folder ஆனது Inbox, Outbox, Draft and Sent என்பவற்றுடன் ஒன்றாக இணைக்கப்பட்டு காணப்படும். இது இணைக்கப்பட்டிருப்பதன் நோக்கம் தவறுதவாக அழிக்கப்பட்ட ஓர் மின்னஞ்சல் கோவையை (File) மீண்டும் பெற்றுக் கொள்ளவே அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்று சேரும் அழிக்கப்பட்ட மின்னஞ்சல் கோவைகளை முற்றாக அழிக்க இலகுவான வழி பின்வருமாறு.

* "Out Look Exprees" மென்பொருளின் திரையின் மேல் பகுதியில் உள்ள Menu Bar இல் உள்ள "Edit" ஐ mouse இனால் கிளிக் செய்யவும்.
* பின்னர் திறக்கப்படும் Menu வில் காணப்படும் ""Empty Deleted Items Folder" இல் Mouse Pointer ஐ வைத்து கிளிக் செய்யுங்கள்.
* "If you really want to permanently delete all these Files?" எனும் வாசகம் வரும்.

  (உண்மையிலேயே நீங்கள் அத்தனை கோவைகளையும் நிரந்தரமாக அழிக்க விரும்புகிறீர்களா?)
* "Yes" எனும் பதிலைக் கிளிக் செய்ய அனைத்து கோவைகளும் நிரந்தரமாக அழிக்கப்பட்டு விடும்.



# விக்கிபீடியா


கட்டற்ற கலைக்களஞ்சியம்

# தகவல்களின் மொத்தத் திரட்டு Wikipedia

தாரிக் அஸீஸ்

Open Source வகை மென்பொருள்களின் வருகையினால் பல உன்னதமான நிலைகள் தகவல் தொழில்நுட்ப விடயங்கள் சார்பாக எய்தப்பட்டுள்ளதை எவரும் மறுக்க முடியாது. தகவல்களைத் திரட்டி, சீராக அடுக்கி வைத்து இணையத்தையே தகவல்களின் சாம்ராஜ்ஜியமாக மாற்றியுள்ள சாதனை பற்றிச் சொல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தகவல்களைச் சீராக ஒழுங்கமைத்தபடி கொண்ட, பெரும்பாலும் எல்லா விடயங்களைப் பற்றிய தகவல்களையும் உள்ளடக்கிய நூலைக் கலைக்களஞ்சியம் (Encyclopedia) என்று சொல்வோம். Encyclopedia என்றாலே எம் எண்ணத்திற்கு வருவதென்னவோ, Encyclopedia Britannica தான். பின்னாளில், Microsoft நிறுவனமும் Encarta Encyclopedia ஐ அறிமுகம் செய்து விடயங்கள் சார்பாக தகவல்கள் கிடைக்கும் வழிகளை இலகுபடுத்தத் தொடங்கியது. ஆனாலும், இன்றைய நிலையில் மேற் சொன்ன Encyclopedia யாவற்றையும் தோற்கடித்து தகவல்களின் மொத்தத் திரட்டாக Wikipedia எனும் கட்டற்ற கலைக்களஞ்சியம் (Free Encyclopedia) உருவெடுத்துள்ளது. Wikipedia வானது, Britannica Encyclopedia ஐ விடவும் பத்து மடங்கு தகவல்களைக் கொண்டுள்ளது. எனவே, இதனைத் தகவல்களின் சாம்ராஜ்ஜியம் என வர்ணித்தது நியாயம்தானே.









## Wikipedia - ஓர் அறிமுகம்


ஹவாய் மொழியில் "விக்கி விக்கி" (Wikiwiki) என்றால் விரைவு என்று பொருள். இணையத்தளங்களைப் பார்வையிடும் எந்தவொரு விருந்தாளியும் (Guest) தொகுக்கக்கூடிய வகையில் (Edit) அமைந்த, இணையத்தளங்களே Wiki என வழங்கப்படும். இவ்வாறான Wiki வகை இணையத் தளங்களைப் பராமரித்து முகாமை செய்வதற்கு Wikiengines எனப் படும் மென்பொருள்கள் பயன்படுகின்றன. இதற்குப் பெரும்பாலும் Open Source வகை மென் பொருள்கள் பயன்படுகின்றன. Mediawiki எனும் Open Source வகையைச் சேர்ந்த மென்பொருள் மூலமே Wikipedia பராமரிக்கப் படுகின்றது. எவராலும் தொகுக்கக் கூடிய வகையிலமைந்த கலைக் களஞ்சியமென்பதால், இதற்கு Wikipedia என்பதே பொருத்த மான பெயராகும்.

## Wikipedia - உருவான நிஜம்



Jimmy Wales

2000ஆம் ஆண்டில் ஜிம்மி வேல்ஸ் (Jimmy Wales) என்பவரும் அவரது சகபாடிகள் சிலரும் இணைந்து, Nupedia எனும் இணைய அடிப்படையான கலைக் களஞ்சிய மொன்றை (Web based Encyclopedia) ஆரம்பித்தனர். இதில், தகைமை வாய்ந்தவர்களிடமிருந்தே ஆக்கங்கள் பெறப்பட்டு வெளியிடப்பட்டன. இதனால் Jimmy Wales எண்ணியது போல், Nupediaவின் வளர்ச்சி அமையவில்லை. இதனால் அவர் தனது சகபாடிகளுடனிணைந்து Encyclopedia ஐ வளர்ச்சியடையச் செய்ய, என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமென தீவிரமாக ஆலோசித்தார்.




அதன்போதே, wiki தொடர்பான எண்ணக் கருவினை அறிந்து அதன்படி, Nupedia ஐ Wiki வகையான கலைக்களஞ்சியமாக மாற்றத் தீர்மானித்தனர். 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி, Nupedia வானது wiki pedia எனப் பெயர் மாற்றப்பட்டு இணையத்திற்கு வந்தது அன்று முதல் தகவல்களின் திரட்டுகை ஆரம்பமாயிற்று. அதனாலோ என்னவோ, ஒவ்வொரு வருடமும் ஜனவரி 15 ஆம் திகதியை "விக்கி பீடியா தினம்" (Wikipedia Day) என சில பயனர்கள் நினைவு படுத்திக் கொண்டாடுகின்றார்கள்.

## விக்கிபீடியா– வளர்ச்சிப்படி

ஆரம்பத்தில், ஆங்கிலத்தில் (http://en.wikipedia.org) மட்டும் காணப்பட்ட Wikipedia பின்னர் நூற்றுக்குமதிகமான வெளிநாட்டு மொழிகளில் தகவல்களைக் கொண்டதாக வளர்ச்சிகண்டது. மொத்த விக்கிபீடியாவில் இலக்கியம், பண்பாடு, வரலாறு, அறிவியல், கணிதம், புவியியல், சமூகம் மற்றும் தொழில்நுட்பம் என பல தொகுதிகளுக்குள் அடங்கும் 3,800,000 இற்கும் மேற்பட்ட கட்டுரைகள் காணப்படுகின்றன. அத்தோடு, ஒவ்வொரு நாளும் விக்கிபீடியாவின் பிரதான பக்கத்தில் (Main Page) சிறப்புக் கட்டுரை, கூட்டு முயற்சிக் கட்டுரை, உங்களுக்குத் தெரியுமா?, மற்றும் வரலாற்றில் இன்று என ஏகப்பட்ட விடயங்கள் சார்பான தகவல்கள் புதிது புதிதாக காட்சியளிக்கும்.

இவை யாவும் உலகின் பல பாகங்களிலுமிருந்தும் இணையத்துடன் இணைந்து தங்களறிவை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள நினைத்த ஆயிரக்கணக்கான பயனர்களின் ஆக்கபூர்வமான சிந்தனையாலேயே சாத்தியமாகியுள்ளது. அத்தோடு, விக்கிபீடியாவிலுள்ள சகல ஆக்கங்களும் GNU Free Documentation License (GFDL) இற்கு இணங்கவே வழங்கப்படுவதனால் இங்குள்ள தகவல்களை எவரும் இலவசமாகவே தமது தேவைகளுக்காகப் பாவிக்க முடியும்.

## Wikipedia - ஏனைய முயற்சிகள்

விக்கிபீடியாவின் துரிதமான வளர்ச்சியின் காரணமாக, தகவல்களைப் பெறும் மூலங்கள் இலகுவாக்கப்பட்டுள்ளதோடு, தகவல்களின் சுதந்திரமும் பேணப்படுகின்றது. விக்கிபீடியாவானது, இன்னும் பல காத்திரமான தகவல் கோட்டைகளை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதை சொல்லாமலும் இருக்க முடியாது. அவற்றுள் பின்வருவனவற்றை எடுத்துக்காட்டாக சொல்லலாம். விக்ஷனரி (Wiktionary) எனப்படும் அகராதி, விக்கி நூல்கள் (wikibooks) எனப்படும் கட்டற்ற




நூல்கள் மற்றும் கையேடுகளின் தொகுப்பு, விக்கி மேற்கோள்கள் (Wikiquotes) எனும் மேற்கோள்களின் தொகுப்பு, விக்கி மூலம் (Wikisource) எனும் இலவச மூல ஆவணங்களின் தொகுப்பு, விக்கி இனங்கள் (Wikispecies) எனும் இனங்களின் கோவை, விக்கி பொது (Wiki- commons) எனும் பகிரப்பட்ட ஊடகக் கிடங்கு என விக்கிபீடியாவின் சேவைத் தொகுதிகளை அடுக்கிக்கொண்டே செல்லலாம். இந்தச் செயற்றிட்டங்கள் யாவும் வெகு சீக்கிரமாக தகவல்களால் போஷிக்கப்பட்டு வருவது, எதிர்கால சந்ததிகளின் தகவல் தாகத்திற்கு பெருந்துணையாக அமையும்.


## Wikipedia - தேமதுரத் தமிழில்....

தமிழ் மொழியிலமைந்த கட்டற்ற கலைக்களஞ்சியம் தமிழ் விக்கிபீடியா (http://ta.wikipedia.org) முயற்சி 2003இல் ஆரம்பமானது. இதில். ஆங்கில மொழியிலமைந்த விக்கிபீடியாவினைப் போல் தகவல் செறிவு இல்லாவிடினும் இதுவரை 3,042 கட்டுரைகள் காணப்படுகின்றன. நீங்கள் இதை வாசித்துக் கொண்டிருக்கும் போதே, கட்டுரைகளின் எண்ணிக்கை மாறியிருக்கக் கூடும்.

தமிழில் அமைந்த விக்கிபீடியாவிற்கு தாங்களறிந்த, மற்றவர் அறிவதால் பயன் ஏற்படுமென எண்ணுகின்ற தகவல்களை எவரும் விக்கீபீடியாவில் சேர்க்க முடியும். இந்த விக்கீபீடியாவில் வேண்டப்படுகின்ற கட்டுரைகள் மற்றும் படிமங்கள் (Images) பற்றிய விபரமும் காணப்படுவதனால், அவற்றை வாசித்தறிந்து இந்த தகவல் சாம்ராஜ்ஜியத்தின் வளர்ச்சியில் பங்கெடுக்கலாம். ஒவ்வொரு பக்கத்திலுமுள்ள "தொகு" எனப்படும் மீ இணையை (Hyperlink) கிளிக் செய்வதன் மூலம் தகவல்களை அளிக்க முடியும்.


தகவல்களை வழங்குவது தொடர்பாகப் பயிற்சி பெறுவதற்கு "விக்கி மணல் தொட்டி" (Wikisandbox) எனும் வசதியும் காணப்படுகிறது. தமிழ் மொழியிலமைந்த விக்கிபீடியாவிலும் ஏனைய முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றுள் விக்கிநூல்கள் மற்றும் விக்கி மேற்கோள்கள் ஆகிய முயற்சிகள் குறிப்பிடத்தக்களவு முன்னேறியுள்ளதை சுட்டிக்காட்டலாம். தமிழ் விக்கிபீடியாவும் தகவல்களின் மொத்த திரட்டாக உருவெடுக்கும் காலம் வெகு தொலைவிலில்லையென எண்ணத் தோன்றுகிறது.

## Wikipedia – தகவல்களை நம்பலாமா?




எவராலும் தொகுக்கப்படக் கூடிய வகையிலமைந்துள்ள விக்கிபீடியாவிலே காணப்படுகின்ற தகவல்கள் உண்மையானதாக விருக்குமா? என்ற கேள்வி எம்மெல்லோருக்கும் வெளிப்படையாகவே உண்டாகும். யாரேனும் ஒருவர், அறியாமலோ, அன்றி வேண்டுமென்றே கூடவோ தவறான தவகவல்களை வழங்க முடியுமல்லவா என்ற சந்தேகம் எழுவது இயல்பே. ஆனால், ஒருவரால் பிழையான தகவல்கள் வழங்கப்பட்டாலும், அவை இன்னொருவரால் திருத்தப்படும் நிகழ்தகவு இதில் அதிகமென்றே நம்பப்படுகின்றது. ஆனாலும் இது பரந்து விரிந்து காணப்படும் எல்லாத் தகவல்களுக்கும் சாத்தியமாகுமா?

இதனை ஆராய்ந்தறிய உலகிலே மிகவும் பிரசித்தமான பிரித்தானியாவின் Nature எனும் விஞ்ஞான சஞ்சிகை முற்பட்டது. இது தொடர்பாக தமது அறிக்கையை கடந்த வருட இறுதிப் பகுதியில் அது வெளியிட்டது. அதில் விஞ்ஞானம் சார்பாக விக்கிபீடியாவில் காணப்படும் தகவல்கள், கட்டுரைகள் மற்றும் படிமங்கள் யாவும், உலகப் பிரசித்தி பெற்ற Encyclopedia Britannica இலுள்ள தகவல்களைப்போல், உண்மையானவையாகுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே. விக்கிபீடியாவானது, தகவல்களின் சுதந்திரத்தையும், நம்பகத் தன்மையையும் பேணும் சிறப்பானதொரு ஊடகம் என்று நம்பலாம்.



## Wikipedia - எதிர்காலம் பலமானது.

உலகின் நாலா பக்கங்களிலுமுள்ள பங்களிப்பாளர்களின் பங்களிப்பின் விளைவாக சேர்க்கப்படும் ஆக்கங்கள், உலகின் பல பாகங்களிலுமுள்ள சுமார் 100 இற்கும் அதிகமான சேவையகங்களில் (Server) சேமிக்கப்பட்டு, விக்கிபீடியா இணையத்தளமூடாக காட்சிப்படுத்தப்படுகின்றன. தகவல்களின் அதிகரிப்பு காரணமாக, எதிர்காலத்தில் இன்னும் அதிகமாக Server களில் சேமிக்கப்பட்டு இணையத்தில் இது பரப்பப்படலாம். இதனால் விக்கிபீடியாவானது, தகவல்களின் மொத்தத் திரட்டாக உருவெடுக்கும் நிலையை எவராலும் தடுக்க முடியாது.

அகிலத்திலேயே அனைத்துத் தகவல்களையும் தெளிவாக, விரிவாகக் கொண்ட ஒரேயொரு கலைக்களஞ்சியமாக விக்கிபீடியா எதிர்காலத்தில் உணரப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்த ஆக்கபூர்வமான முயற்சியை வாழ்த்துவோம்! எம்மால் முடிந்தளவுக்கு நாமும் பங்களிப்போம்.

## 70 மில்லியன் அமெரிக்க டொலர் நட்ட ஈடு வழங்க Microsoft இணக்கம்

Microsoft நிறுவனத்துக்கு எதிராக அமரிக்காவின் கலிபோர்னியா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மென்பொருள்களுக்கு அதிகவிலை சுமை ஏற்படுத்தியதான வழக்கொன்றில் நட்ட ஈடாக 70 மில்லியன் டொலர்களை வவுச்சர்களாக வழங்குவதற்கு அந்நிறுவனம் இணங்கியிருக்கின்றது. இத்தகவலை கலிபோர்னிய வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் இது நீதிமன்ற அனுமதிக்குப் பின்பே சாத்தியம். இந்த வவுச்சர்கள் கலிபோர்னிய அரச மற்றும் உள்ளூர் நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். இவற்றினை புதிய வன்பொருள்கள் அல்லது மென்பொருள்கள் வாங்குவதற்கு அவை உபயோகிக்க முடியும்.

இந்த வழக்கு 2004ம் ஆண்டு ஆகஸ்ட் இல் போடப்பட்டது. கலிபோர்னியாவில் அரச நிறுவன வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கும் நிறுவனம் கூடியளவிலான விலையினை அறவிட்டதாக வழக்கில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு அந்நிறுவனம் Microsoft நிறுவனத்தின் மென்பொருள்கள் மிகக் கூடிய விலையானதாக இருந்தமையே காரணம் என கூறியிருந்தது. இவ்வாறான நட்டஈடு ஒன்றை *2003* இல் Microsoft நிறுவனம் வழங்க வேண்டியிருந்தது. அது Windows Operating System த்துக்கு கூடிய விலையினை அம்மாநிலத்தில் அறவிட்டதற்கானதாகும்.

அதற்காக நாம் நீதிமன்றம் செல்ல முடியுமா? நம்மில் அநேகம் பேர் பாவிப்பதெல்லாம் கள்ளச்சந்தை சீடிகள் அல்லவா? அப்படிப் போனால் நாங்கள் தான் உள்ளே இருக்கவேண்டி வரும்.

## தமிழ் PC TIMES
தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

| | முழுப்பக்கம் | 1/2பக்கம் | 1/4பக்கம் | 1/8பக்கம் |
|---|---|---|---|---|
| பின்னட்டை | 25,000.00 | - | - | - |
| பின் உள்ளட்டை (வர்ணம்) | 22,500.00 | - | - | - |
| முன் உள்ளட்டை | 20,000.00 | - | - | - |
| உள்பக்கம் (க/வெ) | 10,000.00 | 6,000.00 | 3,000.00 | 1,500.00 |
| உள்பக்கம் (க+1) | 12,500.00 | 6,500.00 | 3,500.00 | 1,750.00 |
| உள்பக்கம் (க+2) | 15,000.00 | 8,000.00 | 4,000.00 | 2,000.00 |
| உள்பக்கம் (வர்ணம்) | 17,500.00 | 9,000.00 | 4,500.00 | 2,500.00 |

விளம்பரத் தொடர்புகளுக்கு:
Advertising Manager, Wijeya Newspaper Ltd
48, Parkway Building, Park Road, Colombo 2.

கோட்டை கிளை:
2D, Sir Chittampalam A Gardiner Mw,
Regent Building, Fort. Tel. 238724

கண்டி கிளை:
1st Floor, Nabeesha Building,
Kotugodella Stret, Kandy. Tel.081 2228492

இரத்தினபுரி கிளை:
99 1/1, Bandaranayaka Mw, Ratnapura.
Tel:045 5440115

**உங்கள் கருத்துக்கள், ஆலோசனைகளை எழுதியனுப்புங்கள்**

The Editor
Tamil PC TIMES
WIJEYA NEWSPAPERS LTD
No.08, Hunupitiya Cross Road,
Colombo-02,
Sri Lanka.

## தமிழ் PC TIMES
தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

## உள்நாட்டு, வெளிநாட்டு சந்தாக் கட்டணங்கள்


| காலம் | கொழும்பு நகர எல்லைக்குள் | உள்ளூர் தபால் | "அ"வலயம் | "ஆ"வலயம் | "இ"வலயம் | "ஈ"வலயம் |
|---|---|---|---|---|---|---|
| ஒரு வருடம் | 360.00 | 408.00 | 900.00 | 1,104.00 | 1,212.00 | 1,548.00 |
| ஆறு மாதம் | 180.00 | 204.00 | 450.00 | 552.00 | 606.00 | 774.00 |

wijeya newspapers
helping shape opinions

**WIJEYA NEWSPAPERS LTD**
No.08, Hunupitiya Cross Road, Colombo-02, Sri Lanka
Tel: 2307789, 2314714 Ext. 626, Fax: 2459725,
email: subs@wijeya.lk

காசோலைகள்:
WIJEYA NEWSPAPERS LTD. என்ற பெயருக்கு எழுதப்படவேண்டும்.


iTIMES
JUNE/JULY BETTER LIVIN
OGY ITIMES.ORG
TOP 11
IT Schools Ranked
photo
editing
sharing
eBanking at work
blogging
new wave writers
LEARN ENGLISH AND IT
The new iTimes gives you to learn IT and English at the same time. This issue will teach you how to publish online, which IT schools are the best, and how you can use IT skills to work in international banking. On stands now, or mail subs@wijeya.lk




Printed & Published By - Wijeya Newspapers Ltd., No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02.